Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk


# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, SEPTEMBER 26, 2023

செவ்வாய்க்கிழமை, செப்டெம்பர் 26, 2023 | ஒளி: 09 கதிர்: 092 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE





# 28 அன்று இரு நிறங்களில் ஒளிரும்

புனித நபி முஹம்மது பிறந்தநாளான 2023 செப்டம்பர் 28ஆம் திகதியன்று தாமரை கோபுரம் பச்சை மற்றும் வெள்ளை நிறங்களில் ஒளிரும் என்று தாமரை கோபுர நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# எமது ஆட்சியில் மறுபரிசீலனை

## ஐஎம்எப் பிரதிநிதிகளிடம் எடுத்துரைத்தார் சஜித்

## ஊ.சே.நிதி பாதிப்பு குறித்தும் எடுத்துரைப்பு

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதிகளின் கீழ் மேற்கொள்ளப்படும் மீளாய்வு கலந்துரையாடலில் முதலாவது மீளாய்வின் இறுதி கலந்துரையாடலின் நிமித்தம் வருகை தந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையிலான சந்திப்பொன்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் திங்கட்கிழமை (25) இடம்பெற்றது.

இந்நாட்டின் பல்வேறு பொருளாதார, சமூக, அரசியல் விடயங்கள் தொடர்பில் இரு தரப்பினருக்கும் இடையில் இங்கு நீண்ட கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றது.

குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்துடன் தற்போதைய அரசாங்கம் செய்துகொண்டுள்ள ஒப்பந்தம் தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

தொடர்ச்சி P2

## சீதவாக்கயில் அருங்காட்சியகம் அமைக்க ஜனாதிபதி திட்டம்



சீதாவக்க இராசதானியினால் நம் நாட்டின் சுதந்திரம் பாதுகாக்கப்பட்டது என்றும் அடுத்த தலைமுறைக்கு அது தொடர்பான அறிவை வழங்கும் வகையில் சீதாவக்க பகுதியில் அருங்காட்சியகம் ஒன்றை அமைக்க திட்டமிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### வடக்கு, கிழக்கில் உள்ள தமிழர்கள்

## தீர்வு கிடைக்கும் வரையும் ஒற்றுமை காட்ட வேண்டும்



■ வா.கிருஸ்ணா

தமிழ் மக்களுக்கான தீர்வு கிடைக்கும் வரையில் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழர்கள் தமது ஒற்றுமையினைக் காட்டவேண்டும் என்றும் அதற்காகவே தியாகதீபம் திலீபன் போன்றவர்கள் தியாகங்களை செய்துள்ளார்கள் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஒக்டோபர் 3 முதல் 6 வரை 5ஆவது கலந்துரையாடல்



பிராந்தியத்தின் சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கான ஆசிய பசுபிக் பிராந்திய அமைச்சர்கள் மற்றும் சுற்றாடல் அதிகாரிகளின் ஐந்தாவது கலந்துரையாடல் ஒக்டோபர் 03முதல் 06 திகதி வரை கொழும்பில்

தொடர்ச்சி P2

## ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியால் கடன்தொகை கணிசமாக உயர்வு



அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைந்ததன் விளைவாக இலங்கை செலுத்த வேண்டிய கடனின் மொத்த தொகை கணிசமாக அதிகரித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்ததுடன், ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியானது கடன் நெருக்கடிக்கான பிரதான காரணங்களில் ஒன்றாகும் என்றார்.

தொடர்ச்சி P2

## ஷாஃப்டரின் சடலத்தை ஒப்படைக்க உத்தரவு



பிரேத பரிசோதனை முடிவடைந்த நிலையில் வர்த்தகர் தினேஷ் ஷாஃப்டரின் சடலத்தை அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்குமாறு குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு கொழும்பு மேலதிக நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2


## பொது நினைவுச்சின்னத்தை தமிழினம் அனுமதியாது



■ புகழேந்தன்

போரில் உயிரிழந்த அனைவருக்கும் பொதுவான நினைவுச்சின்னம் ஒன்றை அமைப்பதற்குப் பேரினவாதம் உயிரோடிருக்கும்வரை தமிழினம்

தொடர்ச்சி P2




சீன அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள பாடசாலை உபகரணங்கள் மற்றும் சீருடைகள் விநியோகிப்பதை அடையாளப்படுத்தும் வகையில் ஜனாதிபதி மாணவர்கள் சிலருக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கி வைத்தார்.
12 ஆயிரம் பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் மற்றும் சீருடைகள் வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை (25) முற்பகல் ஹங்வெல்ல ராஜசிங்க மத்திய கல்லூரியில் நடைபெற்றது.



## ரூ.30 கோடி ஹொக்கெய்னுடன் கென்ய பிரஜை சிக்கினார்

சுமார் 30 கோடி ரூபாய் பெறுமதியான ஹொக்கெய்ன் போதைப்பொருளை இலங்கைக்கு கொண்டு வர முயற்சித்த குற்றச்சாட்டில் கென்ய பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## சசித்ர சேனாநாயக்க பிணையில் விடுதலை



ஆட்ட நிர்ணயம் செய்ததாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட முன்னாள் தேசிய கிரிக்கெட் வீரர் சசித்ர சேனாநாயக்கவை கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம், திங்கட்கிழமை (25) பிணையில் விடுவித்தது.

தொடர்ச்சி P2

## பொலிஸாரை தாக்கிய அறுவர் கைதாகினர்

கல்கிசை கடலில் பாறைகள் உள்ள ஆபத்தான இடத்தில் நீராடிக் கொண்டிருந்தவர்களை வெளியேறுமாறு தெரிவித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது தாக்குதல் நடத்திய 6 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

### ஒக்டோபர் முதல் வாரம் முதல்

## அதிவேக பயணிகள் படகு சேவை ஆரம்பம்



2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் முதல் வாரத்தில் இருந்து தமிழ்நாட்டின் நாகபட்டினத்திலிருந்து இலங்கையின் காங்கேசன்துறைக்கு அதிவேக பயணிகள் படகு சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# எமது ஆட்சியில் மறுபரிசீலனை

குறிப்பாக அரசாங்கம் உள்நாட்டுக் கடனை மறுசீரமைப்பதன் மூலம் உழைக்கும் மக்களின் ஊழியர் சேமலாப நிதிய மிகுதியில் ஏற்படுத்தியுள்ள பாதிப்பு குறித்தும் எதிர்க்கட்சித் தலைவர் வருகை தந்திருந்த பிரதிநிதிகளிடம் தெரியப்படுத்தினார்.

அவ்வாறே, ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தவுடன், எட்டப்பட்ட ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்து மக்களுக்கு சாதகமான உடன்பாட்டை மேற்கொண்டு அதன் மூலம் நாட்டை கட்டியெழுப்புவதற்கான மூலோபாயங்கள் குறித்தும் அவதானம் செலுத்தப்படும் என்றும் எதிர்க்கட்சித் மேலும் தெரிவித்தார்.

## ஒக்டோபர் 3 முதல் 6 வரை 5ஆவது கலந்துரையாடல்

நடைபெறவுள்ளதென சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட் தெரிவித்தார்.

அதன் பிரதான அமர்வு ஒக்டோபர் 05 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ளதோடு, ஐ.நா சுற்றாடல் நிகழ்ச்சி நிரல் மற்றும் சுற்றாடல் அமைச்சு இணைந்து ஏற்பாடு செய்யவுள்ள குறித்த நிகழ்வில் பிராந்தியத்தின் சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு நாடுகள், அரசாங்கங்களுக்கிடையிலான அமைப்புக்கள் உட்பட ஏனைய தரப்புக்களுக்கும் வாய்ப்பளிக்கபடும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் திங்கட்கிழமை (25) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இம்முறை கலந்துரையாடலில் ஆசிய பசுபிக் வலயத்தின் 41 நாடுகளின் அமைச்சர்கள், 300க்கும் அதிகமான வெளிநாட்டு பிரதிநிதிகள் மற்றும் 100 க்கும் அதிகமான தொழில்வான்மையாளர்கள் பங்குபற்றுவர் என எதிர்பார்ப்பதாகவும், 2024 பெப்ரவரி 24 தொடக்கம் மார்ச் 01 ஆம் திகதி வரை நைரோபில் நடைபெறவிருக்கும் ஆறாவது ஐ.நா சுற்றாடல் சபையின் அமர்விற்கு இணையாக குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, பிரதான கருத்தாடலுக்கு நிகராக ஆசிய □ பசுபிக் இளையோர் சுற்றாடல் அமைப்பு, ஆசிய அமைதி வலயத்தின் பிரதான குழு மற்றும் பங்குதாரர்களின் அமைப்பு உட்பட சுற்றாடல் தொடர்பான ஆசிய அமைதிக்கான அறிவியல் கொள்கைகளுக்கான வர்த்தக அமைப்பு உள்ளிட்ட அமைப்புக்களின் பல சுற்று கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளதெனவும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

நிலையான பலதரப்புச் செயற்பாடுகளை கருத்தில் கொண்டு, காலநிலை அனர்த்தங்கள், உயிரியல் பல்வகைத்தன்மை அழிவு மற்றும் சுற்றாடல் பாதிப்பு உள்ளிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான வாய்ப்பாக அமையும் எனவும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

## ஷா.:.ப்டரின் சடலத்தை ஒப்படைக்க உத்தரவு

ஷாஃப்டரின் மரணத்துக்கான காரணத்தை விசாரிப்பதற்கு தடயவியல் நிபுணரான பேராசிரியர் அசேல மெண்டிஸ் தலைமையில் பேராசிரியர் டி.சி.ஆர்.பெரேரா, பேராசிரியர் டி.என்.பி.பெர்னாண்டோ, கலாநிதி சிவசுப்ரமணியம் மற்றும் கலாநிதி ருவன்புர ஆகியோர் அடங்கிய விசாரணைக்குழு நியமிக்கப்பட்டது.

அந்த நிபுணர்கள் குழுவினால் விசாரணைகளை மேற்கொள்வதற்கு சடலத்தை தோண்டி எடுக்க வேண்டும் என்று கொழும்பு நீதவான் நீதிமன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதற்கமைய சடலத்தைத் தோண்டி எடுக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டதை அடுத்து, கடந்த மே 25ஆம் திகதியன்று பொரளை மயானத்தில் புதைக்கப்பட்டிருந்த ஷாஃப்டரின் சடலம், தோண்டி எடுக்கப்பட்டு காலி, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

முதற்கட்ட பரிசோதனைகள் நிறைவடைந்துள்ளதாகவும் சடலம் தொடர்பான மேலதிக பரிசோதனைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாகவும் தெரிவித்த கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி ரொஹான் டி.ருவன்புர, முதற்கட்ட பரிசோதனை அறிக்கை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார்.

52 வயதான ஷாப்டர், கடந்த வருடம் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி பொரளை பொது மயானத்தில் நிறுத்தப்பட்டிருந்த அவரது காரின் சாரதி ஆசனத்தில், கழுத்தில் கம்பியினால் கட்டப்பட்ட நிலையில் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டு, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அதிவேக பயணிகள் படகு சேவை ஆரம்பம்

இந்த அதிவேக படகு சேவையானது 60 கடல் மைல் தூரத்தை கடந்து நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து செயற்படத் தொடங்கும் என்று இந்திய கப்பல் போக்குவரத்து கழக வட்டாரங்கள் தெரிவித்ததாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்நாடு கடல்சார் சபை மற்றும் மத்திய துறைமுகம், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகம் இணைந்து இத்திட்டத்தை செயற்படுத்த உள்ளன.

ஷிப்பிங் கார்ப்பரேஷன் ஒஃப் இந்தியாவினால் இந்த அதிவேக பயணிகள் படகு சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், துறைமுக கால்வாய் தோண்டப்பட்டு வருவதாக மாநில கடல்சார் சபை தகவல்கள் தெரிவித்ததாக அந்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

நாகப்பட்டினம் துறைமுகத்தில் பயணிகள் முனையம் விரைவில் அமைக்கப்படும் என்றும் இந்தச் சேவை இலங்கையர்களின் சுகாதாரம், கல்வி மற்றும் சுற்றுலாத்துறைக்கு நன்மை பயக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## பொலிஸாரை தாக்கிய அறுவர் கைதாகினர்

ஆபத்தான இடத்தில் சிலர் நீராடுவதாக கரையோர பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு ஞாயிற்றுக்கிழமை (24) கிடைத்த தகவலுக்கு அமைய அங்கு சென்ற பொலிஸ் அதிகாரிகள், நீராடிக்கொண்டிருந்தவர்களை அவ்விடத்திலிருந்து வெளியேறுமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

அந்த சந்தர்ப்பத்தில் குறித்த நபர்கள் உத்தியோகத்தர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் இரத்மலானை, பிலியந்தலை, அஹுங்கல்ல பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கான 2 பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிகிச்சைக்காக களுபோவில போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், ஒருவர் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## சசித்ர சேனாநாயக்க பிணையில் விடுதலை

விசாரணைக் காலப்பகுதியில் சந்தேகநபர் சாட்சிகள் அச்சுறுத்தியதாக தெரியவராததால் சந்தேகநபருக்கு பிணை வழங்குவதாகத் தெரிவித்த நீதிமன்றம், அவருக்கு 3 மாதங்கள் வெளிநாட்டு பயணத்தடை விதித்தது.

விளையாட்டுத்துறை அமைச்சின் விசேட பொலிஸ் விசாரணைப் பிரிவில் கடந்த 6ஆம் திகதி சரணடைந்த நிலையில் கைது செய்யப்பட்டசசித்ர சேனாநாயக்க நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

2020 நவம்பர்-டிசெம்பர் மாதங்களில் ஹம்பாந்தோட்டையில் நடைபெற்ற லங்கா பிரீமியர் லீக்கில் பங்கேற்ற இரண்டு கிரிக்கெட் வீரர்களை துபாயில் இருந்து தொலைபேசி அழைப்புகள் மூலம் ஆட்டநிர்ணயம் செய்ய அணுகியதாக சச்சித்ர சேனாநாயக்க மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அந்த தொடரில் ஆட்ட நிர்ணயம் செய்தமை தொடர்பில் முன்னாள் தேசிய கிரிக்கட் வீரருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முன்னர் இடம்பெற்ற அமர்வில் சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் கோரிக்கை விடுத்திருந்தார்.

அதற்கமைய சசித்திர சேனாநாயக்க நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுக்குமாறு குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்துக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

சச்சித்ர சேனாநாயக்கவுக்கு எதிராக குற்றவியல் குற்றச்சாட்டை முன்வைக்க விளையாட்டுத்துறை அமைச்சின் விசேட புலனாய்வுப் பிரிவுக்கு சட்டமா அதிபர் திணைக்களம் பணிப்புரை வழங்கியுள்ளதாக நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## பொது நினைவுச்சின்னத்தை தமிழினம் அனுமதியாது

அனுமதியாது என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகம் போரில் இறந்த இராணுவத்தினர், விடுதலைப் போராளிகள், பொதுமக்கள் ஆகிய முத்தரப்பினருக்கும் பொதுவான நினைவுச்சின்னம் ஒன்றை அமைப்பதாக முடிவெடுத்து அதனை விரைவில் நிறுவுவதற்கான தீவிர முயற்சியில் இறங்கியுள்ளது.

இது தொடர்பாக அரசதரப்பால் நியமிக்கப்பட்ட நிபுணர்குழு யாழ்ப்பாண - மாவட்டச் செயலகத்தில் கடந்த சனிக்கிழமை கலந்துரையாடலொன்றை நிகழ்த்தியுள்ளது. தமிழர் தாயகத்தின் ஏனைய மாவட்டங்களிலும் இக்கலந்துரையாடல் தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

இது குறித்து ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளதுடன், அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையத்தின் தீர்மானத்துக்கமைவாக நல்லாட்சி அரசாங்கம் தான் ஏற்றுக்கொண்ட நிலைமாறுகால நீதிப்பொறிமுறையின் கீழ் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் விதமாகப் போரில் உயிர்நீத்தவர்களுக்கான பொது நினைவுச் சின்னமொன்றை அமைப்பதற்கு முடிவெடுத்திருந்தது.

போராளிகளையும் பொதுமக்களையும் அவர்களைக் கொன்றொழித்த படைத்தரப்பையும் ஒன்றாக நினைவிற் கொள்ளும் இம்முடிவிற்குத் தமிழ் மக்கள் அப்போதே தமது எதிர்ப்பை வெளிக்காட்டியிருந்தார்கள். இவ்வெதிர்ப்பைக் கருத்தில் கொள்ளாது அதனை எவ்வடிவத்தில் அமைப்பது என்பது தொடர்பான கலந்துரையாடல் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

## சீதவாக்கயில் அருங்காட்சியகம் அமைக்க ஜனாதிபதி திட்டம்

12 ஆயிரம் பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் மற்றும் சீருடைகள் வழங்கும் “சீதாவக்க □ சிசு அருணலு” நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாடசாலை உபகரணங்கள் மற்றும் சீருடைகள் என்பன சீன அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளமையும் விசேட அம்சமாகும். பாடசாலை உபகரணங்கள் மற்றும் சீருடைகள் விநியோகிப்பதை அடையாளப்படுத்தும் வகையில் ஜனாதிபதி மாணவர்கள் சிலருக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கி வைத்தார்.

அங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி, “சுமார் பன்னிரண்டாயிரம் பாடசாலை மாணவர்களுக்கு இன்று பாடசாலை உபகரணங்கள் மற்றும் சீருடைகள் வழங்கப்படுகின்றன. பிரதமரின் சீன விஜயத்தின் விளைவே இந்த உதவி கிடைத்துள்ளது. ஹங்வெல்ல ,அவிசாவளை என்பது மேல் மாகாணத்தில் மேம்பட்ட கல்வி முறையைக் கொண்ட ஒரு பிரதேசமாகும். அதற்காகப் பெரிய அர்ப்பணிப்பை பிரதமர் செய்து வருகிறார்.

கடந்த ஆண்டு நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியின் காரணமாக கல்வி மற்றும் சுகாதாரத்திற்காக பெருமளவு நிதியை ஒதுக்க முடியவில்லை. ஆனால், அரசாங்கமென்ற வகையில், அடுத்த ஆண்டு முதல் கல்வி மற்றும் சுகாதாரத்துறைக்கு அதிக நிதி ஒதுக்க திட்டமிட்டுள்ளோம்.

க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தரம் பற்றிப் பேசும் போது பாடசாலைக் கல்வி முறையும் டியுசன் கல்வி முறையும் செயற்படுகின்றன. கல்விக்காக அரசாங்கம் செலவழிக்கும் பணத்தைப் போலவே, பெற்றோரும் தங்கள் குழந்தைகளின் கல்விக்காக செலவிடுகின்றனர். இதனைக் கண்டறிந்து புதிய கல்வி முறையைத் தயாரிக்க எதிர்பார்க்கிறோம். கல்வியியலாளர்கள் மற்றும் மாணவர்களின் கருத்துகளைப் பெறவும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், குழந்தைகளுக்கு தேவையான தொழில்சார் கல்வியை வழங்க தேவையான சூழலை உருவாக்க வேண்டும். தொழிற்கல்வியை மறுசீரமைத்து இலங்கையை தொழிற்பயிற்சி கேந்திர நிலையமாக மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதன் மூலம் இலங்கையின் எதிர்கால வளர்ச்சிக்குத் தேவையான தொழில்சார் அறிவைக் கொண்ட ஒரு பிரஜையை உருவாக்கும் திறன் எமக்குக் கிடைக்கும். ஆவுஸ்திரேலியா போன்ற நாடுகள் தங்கள் நாட்டின் எதிர்கால சந்ததியினரை நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிக்கும் வகையில் உருவாக்குகின்றன.

சீதாவக்க இராசதானியினால் நம் நாட்டின் சுதந்திரம் பாதுகாக்கப்பட்டது. அடுத்த தலைமுறைக்கு அது தொடர்பான அறிவை வழங்கும் வகையில் சீதாவக்க பகுதியில் அருங்காட்சியகம் ஒன்றை அமைக்க திட்டமிட்டுள்ளேன்.

இன்னும் சில வருடங்களில் இது ஒரு நகரமாக மாறிவிடும். கோட்டை நகருக்கு நடந்தது சீத்தாவக்கவுக்கும் நடக்க வாய்ப்புள்ளது. எனவே, அதற்கு முன்னர் இந்தப் பணியை ஆரம்பிக்க வேண்டும்.

எதிர்காலத்தை உருவாக்கும்போது, கடந்த காலத்தையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்த அனைத்து சீதாவக்க பாடசாலைகளின் பிள்ளைகளையும் சீதாவக்க இராசதானி மற்றும் சீத்தாவகவின் வரலாறு பற்றிய விடயங்களை எழுதி எங்களுக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவற்றில் சிறந்த படைப்பை சமர்ப்பிக்கும் பாடசாலைக்கு பரிசு வழங்கவும் நான் எதிர்பார்க்கின்றேன்” என்றார்.

## தீர்வு கிடைக்கும் வரையும் ஒற்றுமை காட்ட வேண்டும்

தியாக தீபம் திலீபனின் 36ஆவது ஆண்டு நினைவுதினம் மட்டக்களப்பு நகரில் உள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் தமிழரசுக்கட்சியின் ஏற்பாட்டில் ஞாயிற்றுக்கிழமை (04) மாலை மட்டக்களப்பில் உணர்வுபூர்வமான அனுஸ்டிக்கப்பட்டது.

தியாக தீபம் திலீபனின் உருவப்படத்துக்கு முன்னாள் எம்.பியான பா.அரியநேத்திரனால் மலர்மாலை அணிவிக்கப்பட்டு முன்னாள் எம்.பியான ஞா.சிறிநேசனால் ஈகச்சுடர் ஏற்றப்பட்டது

மட்டக்களப்பு மாநகரசபையின் முன்னாள் முதல்வர் தி.சரவணபவன்,தமிழரசுக்கட்சியின் வாலிபமுன்னணி தலைவர் திவாகரன் மற்றும் முன்னாள் தவிசாளர்கள்,பிரதேசசபை உறுப்பினர்கள்,கட்சி உறுப்பினர்கள்,வலிப முன்னணி உறுப்பினாகள் என பலர் கலந்துகொண்டதுடன், நிகழ்வில் கலந்துகொண்டவர்களும் ஈகச்சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தினர்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த பா.அரியநேத்திரன், “2010ஆம் ஆண்டு தொடக்கம் பல்வேறு இக்கட்டான சூழ்நிலையிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பு, இலங்கை தமிழரசுக்கட்சி இந்த நிகழ்வினை செய்துவருகின்றது.

திலீபன் மருத்துவ பீட மாணவனாகயிருந்து தமிழர்களின் விடுதலைக்காக புலிகளுடன் இணைந்துகொண்டார். 21வயதில் இயக்கத்தில் இணைந்த அவரின் திறமையினைக்கண்ட தலைவர் அவரை யாழ் மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளராக நியமித்தார்.

1987ஆம் ஆண்டு அமைதிப்படையென்ற தோரணையில் இந்திய இராணுவம் கால்பதித்த நிலையில் பல அநியாயங்களை செய்தபோது அது தொடர்பில் பேச்சுவார்த்தை நடைபெற்று தோல்வியடைந்த நிலையில் அகிம்சை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தியாவானது அகிம்சையால் விடுதலை பெற்ற நாடு, காந்திய அகிம்சைபேசும் நாடு என்ற அடிப்படையில் அகிம்சை போராட்டம் நடைபெறும்போது அதற்கான தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையிலேயே திலீபன் போராட்டத்தினை ஆரம்பித்திருந்தார்.

ஆனால் இந்திய அந்த அகிம்சை போராட்டத்தினை ஏற்றுக்கொள்ளாத நிலையில் சரியாக 12வது நாளில் திலீபன் உயிர்நீர்த்தார்.

உலக வரலாற்றில் 23வயது இளைஞன் ஒருவர் உண்ணாவிரத போராட்டம் நடாத்தி உயிர்நீத்த சம்பவம் ஈழத்திலேயே இடம்பெற்றுள்ளது.

அதேபோன்றுதான் இந்திய படைக்கு எதிராக 1989ஆம் ஆண்டு 54வயதுடைய தாய் உண்ணாவிரதமிருந்து உயிர்நீர்த்ததும் வரலாறாகும்.இந்த இரண்டும் இந்திய இராணுவம் இங்கு கால்பதித்தமைக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டது.

13ஆவது அரசியலமைப்பு தொடர்பாக நாங்கள் இன்று பேசிக் கொண்டிருக்கின்றோம். 36 வருடங்களுக்கு பின்னர் நாங்கள் மீண்டும் அதனை சொல்லிக் கொண்டிருக்கின்றோம்.

ஆனால் திலீபனின் கோரிக்கைகளுக்கு அப்பால் இந்த 13வது திருத்ததிற்கு அப்பாலான தீர்வினை வழங்குவதற்கான அழுத்தங்களை வழங்குவதிலிருந்து இந்திய அரசாங்கம் தவறிவருகின்றது.

வடக்கு, கிழக்கு இணைந்த தாயகத்தில் சமஸ்டி அடிப்படையிலான தீர்வு கிடைக்கவேண்டும் என்பதையே இலங்கை தமிழரசுக்கட்சி இன்றும் வலியுறுத்திவருகின்றது” என்றார்.

## ரூ.30 கோடி ஹெராக்கெய்னுடன் கென்ய பிரஜை சிக்கினார்

சந்தேகநபர் 03 பிஸ்கட் டின்களில் பொதி செய்யப்பட்ட 4 கிலோகிராம் கொக்கெய்னை சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குள் கொண்டு வர முயற்சித்துள்ளதாக இலங்கைக்கு வந்துள்ளதாக சுங்க திணைக்களம் தெரிவித்தது.

இந்தோனேசியா அடிஸ்அபாபாவில் இருந்து கட்டார் தோஹாருக்குச் சென்று, அங்கிருந்து கட்டார் விமான சேவைக்குச் சொந்தமான கிவ். ஆர்654 என்ற விமானத்தின் ஊடாக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை ஞாயிற்றுக்கிழமை (24) வந்தடைந்துள்ளார்.

எவ்விதமான விபரங்களையும் தெரிவிக்காது கிரின் செனல் ஊடாக விமான நிலையத்திலிருந்து வெளியேறுவதற்கு முயன்றபோதே, சுங்க அதிகாரிகளினால் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட கென்ய பிரஜை, இலங்கைக்கு முதன்முறையாக வருகைதந்துள்ளார். இவர் தொடர்பில் போதைப்பொருள் சுங்க கட்டுப்பாட்டுப் பிரிவுக்கு சர்வதேச புலனாய்வு தகவல்கள் கிடைத்திருந்தன.

34 வயதான சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக போதைப்பொருட்களுடன், பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# செந்திலுக்கு ஆதரவாக குரல்

■ அபு அலா

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்படுவதாகவும், கிழக்கு மாகாணத்தின் ஒவ்வொரு செயலகங்களிலும் முஸ்லிம்களுக்கான பதவிகள் எதுவும் வழங்கப்படவில்லை என்று உண்மைக்கு புறம்பான அறிக்கையை திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் வெளியிட்டிருந்தார். இது முற்றிலும் பொய்யாகும் என்று குச்சவெளி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எம்.முபாரக் தெரிவித்தார்.

இதுதொடர்பில், திங்கட்கிழமை (25) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முஸ்லிம்களுக்கான உயர்பதவிகளை ஆளுநர் வழங்கியுள்ளார். இந்நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் இம்ரானின் அறிக்கையால் முஸ்லிம் சமூகத்திற்குள் ஆளுநர் மீது தவறான அபிப்பிராயம் எழுந்தமை பெரும் கவலைக்குரிய விடயமாக இருக்கின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த வாரம் ஆயிரக்கணக்கான மீனவர்கள் அரசால் தடைசெய்யப்பட்ட சுருக்கு வலைக்கு எதிர்ப்பு தெரிவித்து மீன்பிடி திணைக்களத்திற்கு முன்பாக வீதி மறிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். அவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள், மீனவ சங்கம், மீன்பிடி திணைக்களம் உட்பட அதுதொடர்பான அதிகாரிகளை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், சந்தித்து அப்பிரச்சினை குறித்து கலந்துரையாடினார்.



அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட அளவீடைக் கொண்ட சுருக்கு வலைகளை பயன்படுத்துவதில் எந்தப் பிரச்சினை இல்லையெனவும், அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்ட அளவீடு, அங்குலங்களைக் கொண்ட வலைகளை பயன்படுத்த வேண்டாமென நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதையடுத்து, ஆளுநரால் எடுக்கப்பட்ட சுமூகமான நடவடிக்கையின் மூலம் மீனவர்களால் போராட்டம் கைவிடப்பட்டது.

இந்நிலையில் மீனவர் பிரச்சினை குறித்து ஆளுநரால் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்பதை அறிந்துகொள்ள முயற்சிக்காத பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப், பிழையான அறிக்கைகளை வெளியிட்டு தன்னுடைய அரசியல் பிழைப்பை நடாத்த பெரும் நாடகத்தை அரங்கேற்ற ஆரம்பித்துவிட்டார்.

இம்ரான் மகரூபின் இந்த பிழையான அறிக்கை சட்ட விரோத மீன்பிடியை ஊக்குவிக்கும் வகையில் உள்ளது. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினரான இம்ரான் மகரூப் இவ்வாறு சட்டத்திற்கு புறம்பான செயற்பாடுகளில் ஈடுபடுவது முற்றிலும் பிழையான விடயமாகும்.

எனவே, இவ்வாறான விடயங்களை பாராளுமன்றத்தினூடாக சட்டமாக்குவதற்கு பாராளுமன்ற உறுப்பினர் முயற்சிக்காமல் மக்களை பிழையான வழியில் திசை திருப்புவதற்கு எதிராக இவர் மீது கடும் கண்டனத்தை தெரிவித்துக்கொள்வதோடு இவருக்கு எதிராக மக்கள் விழித்தெழவேண்டுமென மக்களை வேண்டிக் கொள்கின்றேன் என்றும் முபாரக் கேட்டுக்கொண்டார்.

## “பாலியல் சேஷ்டை செய்த ஆசிரியரை வெளியேற்று”

**பெற்றோர் ஆர்ப்பாட்டம்: அதிபர் உள்ளிட்ட நால்வரை இடமாற்றுமாறும் கோஷம்**



■ எஸ். சதீஸ்

அதிபர் உட்பட 4 ஆசிரியர்களையும் பாலியல் சேஷ்டை செய்த ஆசிரியரையும் இட மாற்றம் செய்யுமாறு கோரி பாடசாலை வளாகத்தில் பெற்றோர்கள் ஆர்ப்பாட்டத்தில் திங்கட்கிழமை (25) ஈடுபட்டனர்.

ஹட்டன் கல்வி வலயத்திற்குட்பட்ட பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் இலக்கம் 2 தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் உட்பட ஆசிரியர்கள் 4 பேரை உடனடியாக இடமாற்றம் செய்யுமாறு கோரி முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் 200ற்கும் மேட்பட்ட பெற்றோர் கலந்து கொண்டனர்

“பாடசாலையின் ஒழுக்கத்தை சீரழித்த அதிபர் ஆசிரியர்களை இடமாற்றம் செய்“, “பாலியல் சேஷ்டை செய்த ஆசிரியரை வெளியேற்று“, “ஹட்டன் கல்வி பணிமனையே நடவடிக்கை எடு”, “இப்போதைய அதிபரை வெளியேற்று, தகுதியான அதிபரை நியமனம் செய்”, “தீர்மானம் எடுக்க தெரியாத முதுகெலும்பு அற்ற அதிபர் எமக்கு வேண்டாம் ” போன்ற சுலோகங்கள் எழுதிய பதாதைகளையும் ஏந்தி பாடசாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

கெர்க்கஸ்வோல்ட் இலக்கம் 2 தமிழ் வித்தியாலயத்தின் ஆசிரியர்களிடையே முறையான ஒழுக்கம் காணப்படுவதில்லை எனவும் ஒரு சில ஆசிரியர்களால் மாணவர்களுக்கு கற்பித்தல் நடவடிக்கையினை முறையாக மேற்கொள்வதில்லை எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றஞ்சாட்டினர்.

இதேவேளை, ஹட்டன் வலய கல்வி பணிமனையின் பணிப்பாளர் நிஹால் அபயகோனின் பணிப்புரைக்கமைய சம்பவ இடத்திற்கு விரைந்த கோட்டம் 2ற்கு பொறுப்பான கோட்டக் கல்வி பணிப்பாளர் என். சிவகுமார் விசாரணைகளை மேற் கொண்டார்.

குறித்த 4 ஆசிரியர்களுக்கும் நாளைய தினத்திலிருந்து இடமாற்றம் செய்யப்படுவார்கள் எனவும் வித்தியாலயத்தின் தற்போதைய அதிபர் ராதாகிருஷ்ணனை ஹட்டன் வலய கல்வி பணிமனைக்கு விசாரணைக்கு அழைக்கப்படுவதோடு கெர்க்கஸ்வோல்ட் இலக்கம் 2 தமிழ் வித்தியாலயத்திற்கு புதிய அதிபர் ஒருவர் நியமிக்கும் வரை அப்பாடசாலையின் பிரதி அதிபர்து ஸ்யந்தனை பாடசாலையை பொறுப்பேற்று நடத்துமாறு பணிப்புரை விடுத்தார்.





## தியாகதீபம் திலீபனுக்காக மரக்கன்றுகள் வழங்கிவைப்பு

■ எம்.றொசாந்த்

தியாகதீபம் திலீபனின் நினைவேந்தலை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களினால் மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன. தியாகதீபம் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் தாயகம் எங்கும் உணர்ச்சியுடன் இடம்பெற்று வரும் நிலையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் மரக்கன்றுகள் திங்கட்கிழமை (25) வழங்கி வைக்கப்பட்டன.

அதன் போது, யாழ் நகர் பகுதி, மருதனார்மடம் சந்தை பகுதி மற்றும் நல்லூர் தியாகதீபம் திலீபன் நினைவுத்தூபி அமைந்துள்ள பகுதிகளில் பொதுமக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

## பஸ் மீது தண்ணீர் போத்தல் தாக்குதல்

■ எம்.எம்.அஹமட் அனாம்.

வாழைச்சேனையிலிருந்து மீராவோடை வழியாக அக்கரைப்பற்று நோக்கிச்சென்ற வாழைச்சேனை டிப்போவுக்குச் சொந்தமான பஸ் மீது மட்டக்களப்பு-வாழைச்சேனை பிரதான வீதியில் 18ம் கட்டைப்பகுதியில் வைத்து இனந்தெரியாத நபர்களால் திங்கட்கிழமை (25) காலை அதிகாலை தண்ணீர் போத்தல் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பஸ்ஸில் கண்ணாடிகள் வெடித்துச்சிதறியுள்ளதுடன், நடத்துனரும் சிறிய காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

குறிப்பிட்ட தாக்குதலால் பஸ்ஸில் பயணம் செய்த பயணிகள் பெரிதும் அசௌகரியத்தை எதிர்கொண்டுள்ளதுடன் தாக்குதலுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

இச்சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## நின்றிருந்த பஸ்ஸூடன் வந்த பஸ் மோதியது

வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ்ஸூடன் வேகமாக வந்துகொண்டிருந்த பஸ்ஸொன்று பின்புறமாக மோதியதில், பயணம் செய்துக்கொண்டிந்த பயணிகளில் 15 பயணிகள் காயமடைந்தனர். இந்த சம்பவம், கொழும்பு- கண்டி வீதியில் திங்கட்கிழமை (25) அதிகாலையில் இடம்பெற்றுள்ளது.

படுகாயமடைந்தவர்கள் வறக்காப்பொலமற்றும் வதுப்பிட்டிவல வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

வெலிமடையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த பஸ், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ்ஸூடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தால் அந்த பிரதான வீதியில் அதிகாலை ஐந்து மணி வரை போக்குவரத்து பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

## கிணற்றில் இருந்து ஆணின் சடலம் மீட்பு

■ பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம் - மயாலங்காடு, ஏழாலை பகுதியில் வசித்து வந்த ஆறுமுகம் துரைராசா (வயது 51) என்பவர் கிணற்றில் இருந்து சடலமாக ஞாயிற்றுக்கிழமை (24) மீட்கப்பட்டுள்ளார்.

வீட்டில் இருந்து புறப்பட்டு வீட்டிற்கு திரும்பி வராத நிலையில் அவரை தேடிச் சென்றபோது, அவர் தோட்டக் கிணற்றினுள் சடலமாக காணப்பட்டுள்ளார்.

இந்நிலையில், அவரது சடலம் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதுடன் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்

## விண்ணப்ப முடிவு திகதியில் மாற்றம்

■ பு.கஜிந்தன்

யாழ்ப்பாண பல்கலைக்கழக சேர்.பொன்.இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடத்தினால் நடத்தப்படும் சங்கீதத்தில் சிறப்பு நுண்கலைமாணி மற்றும் நடனத்தில் சிறப்பு நுண்கலைமாணி கற்கை நெறிகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான உளச்சார்புப் பரீட்சைக்கு-விண்ணப்பிப்பதற்கான முடிவுத் திகதி இம்மாதம் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பல்கலைக்கழக அகுமதித் தேவைகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுள் குறிப்பிட்ட கற்கை நெறிகளுக்கான விசே தகுதிகளைக் கொண்டிருக்கும் மாணவர்களிடமிருந்து சங்கீதத்தில் சிறப்பு நுண்கலைமாணி மற்றும் நடனத்தில் சிறப்பு நுண்கலைமாணி கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. அதற்கான முடிவுத் திகதி கடந்த 21 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் மாணவர்கள் பலரது வேண்டுகோளுக்கிணங்க தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து 30.10.2023 ஆம் திகதி சனிக்கிழமை மதியம் 12.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று பதிவாளர் அறிவித்துள்ளார்.

## பால் புரையேறி 3 மாத குழந்தை மரணம்

■ பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டையில் தாய்ப் பால் புரையேறி மூன்று மாத ஆண் குழந்தை ஒன்று ஞாயிற்றுக்கிழமை (25) உயிரிழந்துள்ளது.

கிருஷ்ணகுமார் கரிஹரன் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்ததுடன், இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

குறித்த குழந்தையின் தாய், குழந்தைக்கு பாலூட்டிய போது குழந்தை அசைவற்று காணப்பட்ட நிலையில் குழந்தையை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது, குழந்தை ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டதுடன், பால் புரையேறியே குழந்தை இறந்ததாக மருத்துவ அறிக்கையிடப்பட்டது.

## தன்னை கடத்தியவர்களின் பிடியில் இருந்து தப்பிய சாரதி


■ நவி

இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான கம்பளை பேருந்து ஒன்றிலிருந்து கடுமையாகத் தாக்கப்பட்டு கடத்திச் செல்லப்பட்டவர் கடத்தல்காரர்களிடம் இருந்து தப்பித்து கம்பளை பொலிஸ் நிலையத்திற்க்கு திங்கட்கிழமை (24) இரவு வந்துள்ளார்.

கொத்மலை, கடதோர பிரதேசத்தைச் சேர்ந்த இவர், கடந்த 24ஆம் திகதி அதிகாலை மாவெலயிலிருந்து கண்டி நோக்கிச் செல்லும் பேருந்தில் சேவை நிலையத்திற்குச் சென்று கொண்டிருந்த போது கடத்தப்பட்டுள்ளார்.

பஸ்ஸில் ஏறி நால்வர் வாள் பற்றி அவரிடம் கேட்டு தாக்கியுள்ளனர். கம்பளை ஜயமாலாபுர பகுதியில் பேருந்தை நிறுத்தி அவரை வேன் ஒன்றில் ஏற்றி கடத்திச் சென்றுள்ளனர்.

கொழும்பில் முச்சக்கர வண்டி ஒன்றில் இருந்து ஆறு மாதங்களுக்கு முன்னர் கண்டெடுக்கப்பட்ட வாள் குறித்து கேட்டுள்ளனர். அதனை ஒருகொடவத்தை பிரதேசத்தில் உள்ள ஒருவருக்கு விற்பனை செய்யப்பட்டதாக கூறினேன். அதன்பின்னர் ஒருகொடவத்தை பிரதேசத்திற்கு அழைத்து சென்றனர். அங்கு வைத்து வாளை பெற்றுக்கொண்டனர் என்று தெரிவித்துள்ள தப்பிவந்த சாரதி, நிட்டம்புவ



தென்னந்தோப்பு ஊடாக தப்பிவந்ததாகவும் பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

அறுவர் உள்ளிட்ட கடத்தல் கும்பலில் பெண்ணொருவரும் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கம்பளை அரச பேருந்து டிப்போவில் சாரதியாக கடமையாற்றும் குறிப்பிட்ட நபரை பொலிஸாரால் திங்கட்கிழமை (24) இரவு கம்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர் .

# மூளைசாலிகளின் வெளியேற்றமும் சூன்யமாகும் எதிர்காலமும்

நாட்டிலிருந்து பெருமளவான படித்தவர்கள், நிபுணத்துவம் வாய்ந்தவர்களான மூளைசாலிகள் வெளியேறினர். இது நாட்டை பாரியளவில் பின்னடைவுக்கு இட்டுச் சென்றது. நாட்டின் நெருக்கடி நிலைமை காரணமாகவே பெரும்பான்மையான புத்திஜீவிகள் நாட்டிலிருந்து வெளியேறினர். இதன் விளைவாக நாட்டை அபிவிருத்திப் பாதையில் முன்னெடுத்துச் செல்லக்கூடிய வாய்ப்புகள் இழக்கப்பட்டன. அதே நிலைமைதான் தற்போது ஏற்பட்டுள்ளது.

ஒரு நாட்டில் வாழும் மக்களுக்கு அந்நாட்டு சுகாதார சேவைகள் மூலம் அவர்களின் வாழ்க்கையில் அதிகபட்ச நம்பிக்கை அளிக்கப்படுகிறது. வைத்தியசாலைக்குச் சென்றால் உயிருடன் திரும்பி வருவோமா? என்ற சந்தேகம், நாளுக்கு நாள் வலுப்பெற்றுள்ளது. அந்தளவுக்கு நிலைமை மோசமாக உள்ளது. பிறந்த சில நாட்களிலேயே இறந்துவிடும் சிசுக்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

நாட்டுக்கு சுற்றுலாத்துறையினரின் வருகை, நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கையில், சந்தோஷமடையும் நபர்கள், புத்திஜீவிகள் வெளியேறுவதை தடுக்கும் வகையிலான திட்டங்கள் எவற்றையும் வகுக்கவில்லை. இது எதிர்காலத்தை கேள்விக்கு உட்படுத்தும். சுகாதார துறைச்சார்ந்த மூளைசாலிகளின் வெளியேற்றமானது. சுகாதார துறையில் கடும் தாக்கத்தைச் செலுத்தும். அச்சுறுத்தலாகவும் அமையும்.

நாட்டிலுள்ள முக்கியமான வைத்தியசாலைகளில் நிபுணத்துவமான வைத்தியர்கள் பற்றாக்குறை கடுமையாக நிலவுகின்றது. இதனால்தான், 65 வயதுக்கு மேல் ஓய்வுபெற்ற விசேட நிபுணத்துவம் பெற்ற வைத்தியர்கள் 500 பேரை, தங்களுடைய விருப்பத்தின் பேரில், ஒப்பந்த அடிப்படையில் சுகாதார துறையில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்திருந்தார். அதற்கு சுமார் 50க்கும் மேற்பட்டவர்கள் தங்களுடைய விருப்பத்தை தெரிவித்துள்ளதாகவும் அறியமுடிகின்றது.

இலவச கல்வியின் ஊடாக கற்றுக்கொண்டு, வெளிநாடுகளுக்கு பயிற்சிகளுக்குச் சென்றிருந்த பலரும் நாடு திரும்பவில்லை. இது சுகாதார துறையில் மட்டுமன்றி ஏனைய துறைகளிலும் இவ்வாறானதொரு நிலைமையே ஏற்பட்டுள்ளது. எனினும், வெளிநாடுகளுக்குப் பயிற்சிகளுக்குச் சென்றிருக்கும் 600 வைத்தியர்கள் மீண்டும் நாடு திரும்புவர் என்ற நம்பிக்கையை அமைச்சர் கெஹலிய கொண்டிருக்கின்றார். திரும்பும் வரையிலும் சந்தேகமே தொக்கி நிற்கின்றது.

சம்பளம் உள்ளிட்ட கொடுப்பனவுகளில் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. தேவையான மருந்துவகைகள் இல்லை, தரம் குறைந்த மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்றெல்லாம் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. பலரும் வெளிநாடுகளுக்கு பறந்துவிட்டமையால், சனத்தொகை விகிதாசாரத்துக்கு ஏற்ப நாட்டில் வைத்தியர்கள் இல்லாத நிலைமையே ஏற்பட்டுள்ளது.

மயக்கமருந்து நிபுணர் ஒருவர் நாட்டைவிட்டு வெளியேறியதன் பின்னர், சத்திரசிகிச்சைகள் நிறுத்தப்பட்டன. இன்னும் சில வைத்தியசாலைகளில் நிபுணர்கள் பற்றாக்குறையால், சத்திரசிகிச்சைகள் நிறுத்தப்பட்டன.

நாட்டின் சுகாதார நிலைமை இவ்வாறுதான் இருக்கின்றது. இலவச சுகாதாரத்தை நம்பியிருப்போருக்கு இது பெரும் தலையிடி, என்பதுடன் எதிர்கால சுகாதாரதுறை கேள்விக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்பது மட்டுமே உண்மையாகும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

பெரும் பசியை விட மனம் களைத்துப் போவதே கடினமானது. அதை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்கு நேரமும் எடுக்கின்றது.

எல்லோரது நெஞ்சமும் அடிக்கடி சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப மாறுவதுண்டு. சிலவேளை நகைப்பார்கள்; சிலசமயம் வேலைப்பழுவால் எரிச்சல்படுவார்கள். குழந்தைகளை ஆர்வத்துடன் அணைக்கும்போது சந்தோச சாகரத்தில் மூழ்கி விடுவார்கள். உணர்ச்சிக்கு மனிதன் அடிமையாகின்றான்.

ஆர்வத்துடன் பணிசெய்பவர்கள், திடீர்ரெனக் கிடைக்கும் அதிர்ச்சித் தகவல்களால், தங்கள் நிலை மறந்துவிடுகின்றனர். அவை சந்தோசமானவையாகவும் இருக்கலாம். துன்பமான செய்தி கேட்ட மனம், பலம் இழந்துவிடுகின்றது.

முரண்பாடான மாறுநிலை வாழ்க்கையில் இயல்பானது என்பார்கள். கட்டுப்படுத்தும் நிலையை, பொறுமையுடன் உருவாக்குக!

இந்நிலையில் இருந்து விடுபடுவது எப்படி? எங்களால் எல்லாச் சந்தர்ப்பத்திலும் தன்னிலை மறகாமல் இருந்து, தங்களைச் சுவீகரிக்க மன ஒடுக்கம் முக்கியமானது.

தியானம், சிந்தனைகளைத் தெளிவூட்டும். எதையும் அதிர்வுடன் நோக்காமல், சாந்தமான நிலையில் நோக்குவதற்கு கொண்டுவந்துவிடும். தனிமை தேவையானது. அமைதியை ஊட்டுகின்றது.

பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

### தீர்க்கப்படாத பிரச்சினைகளின்

# மிக நீளமான பட்டியல்

**மொஹமட் பாதுஷா**

நாட்டில் உருவாகின்ற முக்கியமான பிரச்சினைகளுக்கு தீர்வைக் காணாமல் வெறுமனே பேசியே காலத்தைக் கடத்தவே அரசாங்கமும் பொறுப்புவாய்ந்த ஏனைய தரப்பினரும் பெரிதும் விரும்புவதை நாம் கண்டு வருகின்றோம்.

காயங்களுக்கு உரிய சந்தர்ப்பத்தில் முதலுதவி செய்யாமல், தழும்பாக மாற அவசியமான புறச் சூழல்கள் கட்டமைக்கப்படுகின்றன.

நாட்டின் பிரச்சினைகளை தொடர்ந்தும் பிரச்சினைகளாகவே வைத்துக் கொண்டு, அதனைப் பயன்படுத்தி அரசியல், அதிகார, ஆதிக்க நோக்கங்களை அடைந்து கொள்ள பல தரப்புக்கள் முயற்சிக்கின்றன.

இலங்கையில் கடந்த அரை நூற்றாண்டில் இவ்வாறு ஆற்றப்படாத காயங்களின் பட்டியல் நீளமானது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலும் சர்ச்சைகளும் இதில் கடைசியிலேயே இணைந்துள்ளது.

இனப் பிரச்சினைக்கான தீர்வு இன்னும் முன்வைக்கப்படவில்லை. ஆயுதம் தரித்திருந்த தரப்பினர் என்ன செய்திருந்தாலும், இருதரப்பிலும் மீறல்கள், தவறுகள் இடம்பெற்றிருக்கலாம்; என்றாலும், இந்த விவகாரத்திற்குள் சாதாரண மக்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றார்கள், பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதை மறுக்கவியலாது.

இனப் பிரச்சினை என்பது தமிழர்களுக்கு மட்டுமானது என கூறிவிட முடியாது. அதன் சிறியதும் பெரியதுமான தாக்கங்கள் எல்லா சமூகங்கள் மீதும் உள்ளன. ஆகவே பிரதானமாக தமிழர்களும் அதற்கடுத்ததாக முஸ்லிம்களும் இனப் பிரச்சினையுடன் நேரடித் தொடர்பை கொண்டுள்ளார்கள்.

இதுவொரு தேசிய விவகாரம் என்ற அடிப்படையிலும் தாக்குதல்கள் தென்னிலங்கையிலும் இடம்பெற்றன என்ற அடிப்படையிலும் சிங்கள மக்களின் உணர்வுகளும் புறக்கணிக்கப்பட முடியாதவை. இங்கே 'சிங்கள மக்கள்' எனப்படுவோர் இனவாதிகள் அல்லர். இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டு இனப் பிரச்சினைக்கான தீர்வு இன்னும் எட்டப்படவில்லை. பேச்சுவார்த்தை என்றும் அதிகாரப் பகிர்வு என்றும், 13 பிளஸ் என்றும், வெளிநாட்டு தலையீடு என்றும் 'வாயால் வடை சுட்டுக் கொண்டிருப்பதாகவே' கருத முடிகின்றது.

இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படாதது ஒருபுறமிருக்க மறுபுறத்தில், யுத்த காலத்தில் இடம்பெற்ற மீறல்களுக்கு நீதி நிலை நாட்டப்படவில்லை. இங்கு மீறல்கள் எனும் போது, மோதலுடன் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரது நடவடிக்கைகளும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இறுதி யுத்தத்தில் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுகின்ற மனித உரிமை மீறல்கள், சரணடைந்த நிலையில் காணாமல் போனோர் விவகாரங்கள் இன்னும் இழுபறியாக இருப்பதைக் காண்கின்றோம். பிள்ளையானும் கருணாவும் கே.பி.யும் பெருந்தேசியத்தின் கூட்டாளிகளாகி விட்ட நிலையில், சாதாரண தமிழ் மக்கள் இன்னும் தெருக்களில் நின்று போராடிக் கொண்டிருக்கின்றனர்.

வடக்கு, கிழக்கில் இருக்கின்ற காணிப் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. தமிழர்களின் சில காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. அதேவேளை முஸ்லிம்களின் 2 இலட்சத்திற்கு குறையாத ஹெக்டேயர் காணிகள் பற்றிய பிரச்சினைகளுக்கான தீர்வுகளில் எந்த முன்னேற்றமும் இல்லை.

சனத் தொகை விகிதாசாரத்திற்கு அமைய காணி இல்லாமல், ஏற்கனவே காணப்படுகின்ற பிரச்சினைகளையும் தீர்க்க முடியாமல் முஸ்லிம் சமூகம் தவிக்கின்றது. இந்தப் பின்னணியில் வடக்கு, கிழக்கில் தொல்பொருளியல், பௌத்த வணக்கஸ்தலம் என்ற பெயரில் நவீன வடிவிலான நில ஆக்கிரமிப்புக்களும் அரங்கேற்றப்படுகின்றன. 'கிறீஸ் மனிதர்கள்' என்ற பெயரில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் மக்களை பயமுறுத்தியது யாரின் திட்டம் என்று இதுவரை தெரியாது. வெள்ளை வேன் கடத்தல்கள் பற்றி அரசியல் அரங்கில் பேசப்பட்டாலும், சட்ட ரீதியாக அது உறுதிப்படுத்தப்பட்டு தண்டனை பெற்றுக் கொடுக்கப்படவில்லை.

லசந்த விக்கிரமதுங்க, வசிம் தாஜுதீன் உள்ளடங்கலாக பலதுறைகளையும் சேர்ந்தவர்களின் கடத்தல், தாக்குதல், கொலை பற்றிய உண்மைகள் வெளிக்கொணரப்பட்டு நீதி நிலைநாட்டப்படுவதற்கான காலம் இன்னும் கைகூடி வரவில்லை.

மத்திய வங்கி கொள்ளை மட்டுமன்றி, இலங்கையில் இனவாதத்தை தீனிபோட்டு வளர்த்து அதன்மூலம் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றி, நாட்டை சூறையாடி படுபாதாளத்திற்கு தள்ளிய கூட்டத்திற்கு சட்டப்படி எந்தப் பாடமும் புகட்டப்படவில்லை என்ற அங்கலாய்ப்பு மக்களுக்கு இருக்கின்றது.

யுத்தம் முடிவடைந்த பிறகு, அதனை வைத்து இனியும் அரசியல் செய்வது சிரமம் என்ற நிலைமை உருவாகியது. அதாவது புதிய 'புண்' ஒன்று தேவைப்பட்டது எனலாம். இந்த தருணத்தில்தான் முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதமும் கருத்தியலும் கனகச்சிதமாக உருவேற்றப்பட்டது.

முஸ்லிம்களின் வர்த்தகமும் இஸ்லாமிய மதமும் வெளிப்படையாகவே இலக்கு வைக்கப்பட்டன. முஸ்லிம் கடைகளில் விற்கப்படும் உள்ளாடைகளில் கருத்தடை திரவங்கள் தடவப்படுவதாக ஒரு பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது. இதனையெல்லாம் கொஞ்சம் கூட புத்திசாலித்தனமாக சிந்திக்காது பெருந்தேசிய சக்திகளும் ஊடக அரசியல் செய்கின்ற சில ஊடகங்களும் சிங்கள மக்களை சூடேற்றி விட்டன. இதனை 'பொய்' என்று ஒரு சில சிங்கள முற்போக்காளர்களைதவிர, அரசஇயந்திரமோ பொறுப்புவாய்ந்த சிங்கள கட்டமைப்போ தெளிவுபடுத்த தவறிவிட்டது.

மாறாக, இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முஸ்லிம் சமூகத்திற்கும் சிங்கள, தமிழ் சமூகங்களுக்கும் இடையிலான ஒரு பிரிகோட்டை, நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தி அவர்கள் அதில் குளிர்காய்ந்தார்கள். அரசியல் இலாபம் தேடினார்கள்.

இதன் உச்சக்கட்டமாக வைத்தியர் ஷாபி விவகாரத்தைச் சொல்லலாம். இந்த வைத்தியர் பல நூற்றுக்கணக்கான சிங்களப் பெண்களுக்கு கருத்தடை செய்ததாக இனவாதிகள் கூறினர். ஒரு குறிப்பிட்ட வைத்தியர், அங்கிருக்கின்ற ஏனைய வைத்தியசாலைப் பணியாளர்களுக்கு தெரியாமல், கிட்டத்தட்ட ஆயிரம் பேருக்கு கருத்தடை செய்தார் என்று சொன்னால் புத்தியுள்ள யாரும் நம்பலாமா?

ஆனால் இனவாதிகளும் அரசியல்வாதிகளும் சிங்கள மக்களிடையே அதனை நம்ப வைக்க செயற்பட்டனர். மறுபுறத்தில், சின்னச் சின்ன விடயங்களுக்கு எல்லாம் வீதிக்கு இறங்கி நியாயம் கேட்கின்ற அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கூட, சில பல காரணங்களுக்காக இது விடயத்தில் நீதமாகச் செயற்படவில்லை.

வைத்தியர் ஷாபி சிறையில் இருந்த போது, அவரால் கருத்தடை செய்யப்பட்டதாக சொல்லப்பட்ட பெண்கள் கர்ப்பமடைந்த 'வினோதங்கள்' பற்றி யாரும் பேசவில்லை. அதுமட்டுமன்றி, இப்படி ஒரு பெரிய பொய்யை பரப்பி, மக்களை குழப்பிய அரசியல்வாதிகள், ஊடகங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதன் சூத்திரதாரிகள் தண்டிக்கப்படவில்லை.

அதேவேளை, அளுத்கம, பேருவளை மற்றும் திகண கலவரங்களுக்கு பின்னால் இருந்த சக்திகளுக்கு பகிரங்க தண்டனை வழங்கப்பட்டு முஸ்லிம் மக்களுக்கு நீதி வழங்கப்படவில்லை. அம்பாறை வன்முறை மற்றும் 2019 மே மாதம் வடமேல் மாகாணம் தொடங்கி மினுவாங்கொடை வரை இடம்பெற்ற வன்முறைகளின் நிலையம் இதுதான்.

2019 ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல் இவற்றை எல்லாம் விட பாரதூரமானதும் மிலேச்சத்தனமானதும் ஆகும். தாக்குதல் திட்டத்தை நிறைவேற்றியவர்கள் சஹ்ரான் கும்பல் என்றாலும், இதற்கும் சாதாரண முஸ்லிம்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும், அதற்கான தேவையும் இல்லை என்றும் முஸ்லிம் சமூகம் அப்போது மன்றாட்டமாகச் சொன்னது.

ஆனால் அதனை யாரும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. அதிகாரத்தை கைப்பற்றும் வெறியில் இருந்த தரப்பிற்கும், அவர்களுக்கு துணைபோகின்ற அரச அதிகாரிகளுக்கும் இதில் ஒரு தேவையிருந்தது. முஸ்லிம்களை நசுக்கி, ஒரு 'படம்' காட்டி விட்டு அவர்களது இலக்கை அடைய முற்பட்டனர்.

அந்த இலக்கு ஒரு தேர்தல் வெற்றி என்றால் அது அடையப்பட்டு விட்டது. ஆனால் கொல்லப்பட்ட கிறிஸ்தவ மக்களுக்கும், நசுக்கப்பட்ட முஸ்லிம்களுக்கும் நீதி நிலைநாட்டப்படவில்லை.

இப்போது, அசாத் மௌலானா வடிவில், சனல் 4 தொலைக்காட்சியின் ஊடாக, திரைமறைவுக் கதைகள் வெளிவரத் தொடங்கியுள்ளன. மக்கள் ஏற்கனவே ஊகித்த விடயங்களை, இந்த தாக்குதலுடன் ஏதோ ஒருவகையில் தொடர்புபட்ட ஒருவரின் வாயினாலேயே காலம் வெளிக் கொணர்ந்திருக்கின்றது எனலாம்.

இதனை விசாரிப்பதற்கு இரு விசாரணைக் குழுக்களை நியமிப்பதாக ஜனாதிபதி சார்பாக அவரது செயலகம் அறிவித்துள்ள நிலையில், அவர் அமைச்சராக உள்ள பாதுகாப்பு அமைச்சு இதில் உள்ள குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளது. இந்த முரண் நிலையில், இந்த விசாரணை எவ்வளவு தூரம் போகும்? என்ற ஐயப்பாடு மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இப்படி, கடந்த காலங்களில் எந்தவொரு முக்கிய பிரச்சினைக்கும் தீர்வு காணாமல் விட்ட காரணத்தினாலேயே, நாடு இப்படி ஒரு மோசமான நிலைக்கு வந்திருக்கின்றது. எனவே, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணை விடயத்திலும் அரச இயந்திரம் பொறுப்பற்ற தனமாக செயற்படுவதன் மூலம் தமது தவறுகளை புதுப்பித்துக் கொள்ளக் கூடாது.

## கடிதங்கள்

### சொறி நாய்களின் தொல்லை

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட வீதிகளில் கட்டாக்காலி சொறி நாய்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. அத்துடன் பிரதான வீதிகளில் பொதுமக்கள் நடமாட முடியாத அளவுக்கு கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

குறித்த வீதியில் அன்றாடம் செல்பவர்களை இந்த சொறி நாய்கள் கடிக்க வருகின்றன. மேலும் வீதிகளில் காணப்படும் விலங்கு எச்ச கழிவுகள் உரிய முறையில் அகற்றப்படாமையினால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது. தற்போது 20 க்கும் மேற்பட்ட நாய்கள் இரவு பகலாக கட்டாக்காலிகளாக உலாவி நகருக்குள் கழிவுகளை உண்பதற்காக வெளியிடங்களில் இருந்து உட்பிரவேசிக்கின்றன.

குறிப்பாக கல்முனை-நற்பிட்டிமுனை பிரதான வீதி கல்முனை -பாண்டிருப்பு பிரதான வீதி கல்முனை -சாய்ந்தமருது செல்லும் முக்கிய பிரதான வீதிகளில் பகல் இரவு பாராது சொறி நாய்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இதனால் தொடர்ச்சியாக விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றன.

எனவே உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி பொது மக்களை பாதுகாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாறுக் ஷிஹான்



# முற்தடுப்பு முக்கியம்



ம.கலைச்செல்வன்
ஊடககற்கைகள் துறை
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.

உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் ஒரு சமூகப் பிரச்சினையாக சிறுவர் துஷ்பிரயோகம் இன்று காணப்படுகின்றது. இலங்கை போன்ற நாடுகளில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்வதால் அது நாட்டின் சுபீட்சத்தையும், சிறுவர்களின் எதிர்காலத்தையும் நாசமாக்கி விடுமோ என்ற அச்சம் தோன்றியுள்ளது.

துஷ்பிரயோகத்தின் தாக்கங்கள் சிறுவர்களின் கல்வி, உள மற்றும் ஆளுமை விருத்தியில் பல்வேறு பாதிப்பைச் செலுத்தியுள்ளன.

சிறுவர் மீதான துஷ்பிரயோகம் அதிகரித்து வருவது குறித்து நாட்டின் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கவலையும், கண்டனமும் வெளியிட்டுள்ளது.

இவ்வருட ஆரம்பம் முதல் செப்டெம்பர் மாதம் முற்பகுதி வரை 5456 சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்குக் கிடைத்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றில், 242 முறைப்பாடுகள் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பானவையாகவும் ,1296 சிறுவர்கள் இரக்கமற்ற முறையில் நடத்தப்பட்டவையாகவும் 163 பாரதூரமான காயங்கள் தொடர்பானவையாகும்.

சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுக்கும் வழிமுறைகளும், சட்டதிட்டங்களும், தண்டனைகளும் நடைமுறையில் உள்ள போதிலும், சிறுவர் துஷ்பிரயோகங்கள் தினமும் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

சிறுவர்கள் என்றால் யார்,சிறுவர் துஷ்பிரயோகம் என்றால் என்ன?, துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதற்கான காரணங்கள் எவை?, துஷ்பிரயோகங்களிலிருந்து எவ்வாறு சிறுவர்களைப் பாதுகாக்க முடியும் போன்ற விழிப்புணர்வு ஒவ்வொரு தனிநபருக்கும் இன்றியமையாதாகும்.

சிறுவர்களைப் பாதுகாப்பதற்காகவும், சிறுவர்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் ஐ.நாவின் சிறுவர் உரிமைகள் பட்டயம் உருவாக்கப்பட்டுள்ளதுடன் 1991ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தினாலும் அது அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இந்த வகையில் இலங்கையில் 18 வயதிற்குக் குறைந்த சகலரும் சிறுவர்களாகக் கருதப்படுகின்றனர். சிறுவர் துஷ்பிரயோகம் என்பது சிறுவர்களை அவர்களின் இயல்புகளுக்கும், தன்மைகளுக்கும் முரணாகப் பயன்படுத்துதல் எனலாம்.

WHO சிறுவர் துஷ்பிரயோகத்தை "சிறுவர்களை உடல் ரீதியாக அல்லது உணர்வு ரீதியாகப் பாதிப்படையச் செய்தல், பாலியல் துஷ்பிரயோகம், புறக்கணித்தல், வர்த்தகம் அல்லது வேறு விடயங்களுக்காக அவர்களைச் சுரண்டல் போன்றவற்றின் மூலம் அவர்களின் ஆரோக்கியம், உயிர் வாழ்தல், வளர்ச்சி மற்றும் கௌரவம் போன்றவற்றுக்குப் பாதிப்பை ஏற்படுத்துதல் சிறுவர் துஷ்பிரயோகம்" என சுட்டிக்காட்டுகிறது.

பொதுவாக சிறுவர் துஷ்பிரயோகமானது பல்வேறு வடிவங்களில் அரங்கேற்றப்படுகின்றது. உடலியல்,உளவியல், பாலியல்,மற்றும் புறக்கணிப்பு ரீதியிலான துஷ்பிரயோகம் எனப் பல்வேறு கோணங்களில் சிறுவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாக்கப்படுகின்றனர்.

சிறுவர்களை நிராகரித்தல், திட்டுதல், சாபமிடுதல், மானபங்கப்படுத்தல், பயமுறுத்தல், தனிமைப்படுத்தல் போன்றன உளவியல் ரீதியான துஷ்பிரயோகமாகக் கொள்ளப்படுகின்றன.

பாலியல் துஷ்பிரயோகம் என்பது சிறுவர்களைத் தொடுதல், வருடுதல், பொருத்தமற்ற பாலியல் சொற்களைப் பயன்படுத்துதல், பாலியல் தொந்தரவுகளைக் கொடுத்தல், பாலியல் செயற்பாடுகளைப் பார்ப்பதில் ஈடுபடுத்தல், போன்ற செயற்பாடுகளில் சிறுவர்களை ஈடுபடச் செய்வதாகும்.

ஒரு சிறுவனுக்குரிய உடை, உணவு, சுகாதாரம், பாதுகாப்பு, மருத்துவம், கல்வி போன்ற அடிப்படைத் தேவைகள் மறுக்கப்படுகின்ற போது அச்சிறுவன் புறக்கணிப்பு ரீதியிலான துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகின்றான். சிறுமிகள் தந்தையின் மூலமாக கர்ப்பமடைதல், சிறுவர்கள் சூடு வைக்கப்படுதல், தவறான முறையில் பெண் பிள்ளைகள் கர்ப்பம் தரித்தல், பகுதி நேர வகுப்புகளுக்கு செல்லும் சிறுமிகள் பாலியல் தொந்தரவுக்கு உள்ளாதல், ஆசிரியர்களால் உடல், உள ரீதியாகத் தண்டிக்கப்படல், சிறுவர்களின் புகை மற்றும் மதுப்பாவனை, காதல் பிரச்சினை, பிள்ளைகளுக்குரிய உரிமைகள் வழங்கப்படாமை, சிறுவர்களை வேலைக்கமர்த்தல் போன்ற சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

இலங்கையின் குற்றவியல் சட்டத்தின்படி, யாராவது சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டால் அவருக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டு வழக்குத் தொடரப்பட்டால் சந்தேகநபர் உடனடியாக 14 நாட்கள் தடுப்புக் காவலில் வைக்கப்படுவார். அதிகபட்சமாக 03 மாதங்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட பின் வழக்குத் தொடரப்படும். 03 மாதத்தின் பின் நீதிபதி விரும்பினால் அவருக்கு நிபந்தனையுடன் கூடிய பிணை கொடுக்கலாம். இம்மாதிரியான சம்பவங்களில் தண்டனை பெற்றுக்கொடுப்பதற்கு சராசரியாக 8 வருடங்கள் வரை காத்திருக்க வேண்டியுள்ளதால் வழக்குகள் நீதிமன்றத்தில் கூடுதலாக தேங்கிக் கிடப்பதாகவும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

உடலியல் மற்றும் பாலியல் ரீதியிலான துஷ்பிரயோகங்கள் அண்மைக்காலங்களில் அதிகரித்துக் காணப்பட்டுகின்றன. இதில் குறைந்தளவு சமூகப் ,பொருளாதார நிலைமைகளே அதிக செல்வாக்கைச் செலுத்துகின்றன. அதில், துஷ்பிரயோகம் பற்றிய அறிவீனம்,பெற்றோரின் போதைப்பாவனை, குடும்ப வன்முறை, பெற்றோரின் வெளிநாட்டுப் பயணம், தவறான சகவாசம், தனிமை, பெற்றோரின் பிரிவு, அன்பு கிடையாமை, படிப்பறிவின்மை, பொருளாதாரச் சிக்கல்கள், சமூக வலைத்தளங்களினூடான தவறான நண்பர்களின் சகவாசம், இணையத்தைத் தவறாகப் பயன்படுத்தல் போன்றவற்றை சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு எளிதில் ஆளாவதற்குப் பிரதான காரணங்களாக குறிப்பிடலாம்.

சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாவதன் காரணமாக அவர்களில் கல்வி சீர்குலைதல், பாடசாலை இடைவிலகல், அறிவு, மனவெழுச்சி மற்றும் சமூக வளர்ச்சி பெருமளவு பாதிப்படைதல், சமூகத்தால் இழிவுபடுத்தப்படல், குற்றவாளியாக முத்திரை குத்தப்படல், முறையற்ற அல்லது தவறான பாலியல் நடத்தைகளில் ஈடுபடப் பழகுதல், உளப் பிரச்சினைகளுக்குள்ளாதல், பிள்ளை பெரியவனான பின்னர் பாலியல் சார்ந்த செயல்களில் ஈடுபடல், பாலியல் நடத்தை தொடர்பான பயமும், தாழ்வு மனப்பான்மையும் ஏற்படல், திருமணம் தொடர்பான அச்சம் ஏற்படல், பாலியல் நோய்களுக்கு ஆளாகுதல் போன்ற பல்வேறு தீய விளைவுகள் ஏற்படுகின்றன.

இது தொடர்பில் மிக அவதானமாக இருக்க வேண்டியவர்கள் பெற்றோர்கள் மற்றும் பாடசாலை ஆசிரியர்களுமாவர். பாடசாலைகளில் மாணவர்களுக்கு சிறுவர் உரிமைகள் தொடர்பிலும், மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வயதுப் பிரிவுக்கேற்ற வகையில் பாலியல் கல்வி போதிக்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகவுள்ளது.

சிறுவர்கள் பாதிப்புக்கு உள்ளாகுவதைப் பார்ப்பவர்கள் உடனடியாக இலவச தொலைபேசி அழைப்பின் மூலம் (1929) சிறுவர் பாதுகாப்பு அமைப்பிடம் முறைப்பாடு செய்வதின் மூலம் குறிப்பிட்ட குற்றவாளிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். கிராம உத்தியோகத்தர், பிரதேசத்தின் கண்காணிப்புக் குழு, பொலிஸ் நிலையம், பிரதேச செயலக சிறுவர் மகளிர் பிரிவு, சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் போன்றவர்களுக்குத் தெரியப்படுத்துவதன் மூலமும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சியானது எதிர்கால சந்ததியினரின் அறிவுசார் வளர்ச்சியிலும், ஆளுமையின் மீதும் தங்கிருக்கின்றது. இதனால், குழந்தைகளின் வளர்ச்சியும், அவர்களது சுதந்திரமும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகிறது. இந்தவகையில், சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கான முற்தடுப்பானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இதனை சிறுவர் துஷ்பிரயோகம் நிகழ்வதற்குச் சாதகமான நிலைமைகளை நீக்குவதன் மூலம் அடைய முடியும்.மேலும், பாதிப்படைந்த சிறுவர்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதன் மூலம் அவர்களுக்குத் தேவையானவற்றை வழங்கி, அவர்களையும் ஏனைய சாதாரண சிறுவர்களைப் போல வளரச் செய்து சமூகத்தில் பயனுள்ள பிரஜைகளாக ஆக்க முடியும்.

பூகோளமயமாதலினால் கலாசாரம் பண்பாடு

# அழிகிறதா? வளர்கிறதா?



சிவகுமாரன் கதீசனா
இரண்டாம் வருடம் ஊடகக் கற்கைகள்
யாழ் பல்கலைக்கழகம்

தற்காலத்தில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், போக்குவரத்து, தொடர்பாடல் போன்ற துறைகளில் ஏற்பட்டுவரும் வேகமான செயல்பாடுகளில் எந்த நாடும் தனித்தியங்க முடியாதுள்ளது. ஆதலால் உலக நாடுகளுக்கிடையில் பல்வேறு வகையிலான தொடர்புகள் காணப்படுகின்றன. இவ்வாறு அனைத்து நாடுகளும் பல்வேறு துறைகளினூடாக தொடர்புகளை மேற்கொள்ளும் செயல் முறையினை பூகோளமயமாதல் எனலாம்.

பூகோளமயமாக்கல் உலக நாடுகளையும் அவற்றில் வாழும் மக்களையும் ஒருங்கிணைக்கும் செயல்முறையாகும். அது பல பிணைப்புகளூடாக உலக மக்களை அருகில் இணைப்பதோடு அவர்கள் ஒருவரில் ஒருவர் தங்கி இருக்கும் நிலையை அதிகரிக்கின்றது.

சமுதாய உறவுகளை மேம்படுத்தவும் உலகில் எண்ணங்கள் மற்றும் மதிப்புக்களின் பரிமாற்றத்தை குறிப்பதாகவும் கலாச்சார உலகமயமாக்கல் விளங்குகிறது. மனித இயக்கத்திற்கு கலாசாரம் முக்கிய சக்தியாக இருப்பதுடன் உலகமயமாக்கல் சூழலில் அது ஏற்படுத்தும் பாரிய தாக்கத்தை அவதானிக்க வேண்டியுள்ளது. உலகமயமாக்கல் மேற்கு மற்றும் கீழ் உலகங்களை ஒருங்கிணைக்கச் செய்த முயற்சிகள் இரு துருவங்களிலும் கலாசார ரீதியாக சில நகர்வுகளை நிகழ்த்தி இருக்கின்றன.

இருபதாம் நூற்றாண்டின் அதிகமான பகுதிகளிடையே மானிட வேளாளர்கள் கலாசாரமானது நம்பிக்கைகள் , எண்ணங்கள் ஆகியவற்றை பொதுவாக பகிர்பவர்களை அடையாளம் காணத்தக்க சுய அடையாளம் கொண்டவர்களாக ஒன்றுபடுத்தி வைத்திருக்கும் ஒரு தொகுதியாகும். உள்ளூர் கலாசாரம் என்ற பதம் குறிப்பானதும் அடையாளம்,காண கூடியதாகவும் உள்ளூர் நிலைமைகளின் நிலவும் அன்றாட வாழ்க்கை அனுபவங்களை விவரிக்கவே பயன்படுகிறது. உள்ளூர் கலாச்சாரங்கள் உறுதியாகவே இருக்கின்றன என்று வைத்துக் கொண்டால் உண்மையில் எத்தனையோ அம்சங்களை கொண்டிருக்கக் கூடிய ஒரு உலகமயமான கலாசாரம் நிலவுகிறது என்று கூறுவது கடினமாகிவிடும். விரிவான வேகத்தில் இயங்கும் வசதி படைத்தவர்களுக்கு குறிப்பிட்ட உள்ளூரிலின்றி ஒரு பூகோள வலையமைப்பில் இயங்குவது வசதியாக தோன்றலாம். ஆயினும் அத்தகையவர்கள் மிகச் சிறுபான்மையினராகவே இருக்கின்றார்கள்.

> **உலகமயமாக்கத்தின் விளைவாக இப்போது உலகில் 50 விதமான மொழிகள் அழிவடையும் ஆபத்தில் உள்ளன.உலக மக்கள் தொகையில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்களுக்கு 23 மொழிகள் மட்டுமே உள்ளன**

பூகோளமயமாதலின் பலனாக பல்வேறுபட்ட மாற்றங்கள் அல்லது விளைவுகள் ஏற்பட்டுள்ளன. அவற்றில் சாதக, பாதகமான விளைவுகளும் ஏற்பட்டுள்ளன. பொருளாதார மருத்துவ, தொழிநுட்ப, தொடர்பாடல் மற்றும் வாழ்க்கை தர வளர்ச்சி, பால்நிலை உறவுமுறை அதிகரிப்பு, துறை ரீதியான ஆய்வுகளை மேற்கொள்ளல்,வாழ்க்கை வட்டம் அதிகரித்தல், பெண்கள் முன்னேற்றம், பல்சமூக கலாசாரம் போன்றவை சாதகமானவையாகும்.

பாதகமான விளைவுகள் எனப் பார்க்கையில், சுற்றுச்சூழல் பாதிப்பு, வறுமை, சமத்துவம் இன்மை, நீதியற்ற தன்மை போன்றனவும், தனியார் நிறுவனங்கள் இலாப நோக்கோடு செயற்படல், எல்லைகளைத் தாண்டி பிரவேசித்தல், இனமத பிரிப்பு காலனித்துவம் போன்றவற்றை கூறலாம்.

கலாசாரமானது மனித நாகரிகத்தோடு இணைந்ததாகும். அது சமூகத்திற்கு சமூகம் வேறுபடும். கலாசார பூகோள மயமாக்கல் என்பது பலமான கலாச்சாரத்தின் பண்புகள் பல்வேறு ஊடகங்களூடாக வேறொரு கலாச்சாரத்திற்குள் ஊடுருவுவதாகும்.

## பூகோளமயமாதலில் பண்பாடு அல்லது கலாசாரம் அழிந்து போகின்றதா? வளர்க்கப்படுகின்றதா?

பண்பாட்டுக் கூறுகள் என நோக்கும் போது உணவு, உடை, , மொழி, ஆடை, வழிபாடு, பழக்கவழக்கங்கள், விளையாட்டு, நாகரிகம் எனலாம். இக்கூறுகள் பல்வேறு வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தி உள்ளன. இவற்றில் முதலில் மாறிய கூறு சமயம் ஆகும்.

சமயத்தை எடுத்துக் கொள்ளும் போது ஒரு நாட்டு சமயத்தவரின் பழக்க வழக்கங்கள், வழிபாட்டு முறைகள் பரப்பப்பட்டுள்ளமையும், மாற்றமடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. பல் சமூக பண்பாடு, கலைகள் உலகெங்கும் பரவப்பட்டு வருகின்றன. கீழைத்தேய இந்து வழிபாட்டு முறைகள் மேலைத்தேய நாடுகளிலும் காணப்படுகின்றன.

இன்றைய உலகில் மக்களது உடைகளில் பல மாற்றங்கள் உள்வாங்கப்பட்டுள்ளது. முக்கியமாக "டெனின்" கலாசாரம் ஆரம்பித்தமைக்கு இப் பூகோளமயமாதல் முக்கிய காரணமாகிறது. இவ்வாறாக ஆடைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

கலாசாரத்தின் மிகப் பழமையான "பூகோள காவி" உணவாகும். உணவானது ஐரோப்பிய வர்க்கத்தினதும் காலனித்துவ விரிவாக்கத்தின் ஆரம்ப கட்டங்களின் போதும் உலகமயமாக்கத்திக்கான ஒரு இயக்க சக்தியாக இருந்துள்ளது. செம்மிளகானது 1493 ஆம் ஆண்டு ஸ்பானிய அரச சபையில் கொலம்பஸால் அறிமுகப்படுத்தப்பட்டு விரைவிலேயே உலகம் முழுவதும் பரவி ஆபிரிக்கா, ஆசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் சமய மற்றும் விவசாய முறைகளையே மாற்றியமைத்தது.

நவீன உலகின் புதிய பூகோள உணவு போக்கு பெரும்பாலும் உடற்பருமன் ,நீரிழிவு ஆகியவற்றை அதிகரிக்கும் ஆபத்தைக் கொண்டுள்ளது.

உள்ளூர் மட்டத்தில் கலாசார போக்குகள் பற்றிய ஒரு நெருக்கமான ஆய்வு உலக உணவு உலகமயமாக்கப்படுவதால் பொதுமக்கள் நடத்தையில் பாதிபுக்கள் ஏற்படலாம் என்பதை காட்டுகிறது.மக்கள் உடனடி நவீன உணவு உணவுகளுக்கு பழக்கப்படுத்தி உள்ளனர் . இது நேரத்தை மீதப்படுத்தினாலும் ஆரோக்கியமற்றதாக காணப்படுகிறது. இது பூகோளமயமாதலின் விளைவாகும்.

> **என்னதான் மாற்றங்கள் எதிர் வந்த போதிலும் நமது மக்கள் நமது பண்பாட்டை இழத்தல் ஆகாது .அந்த வகையில் கலாசார பூகோளமயமாதலினால் கலாசாரம் அழிந்தும் போகின்றது வளர்க்கப்பட்டும் வருகின்றது**

இன்றைய காலத்தில் செயற்கையான அழகு சாதன பொருட்களின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. செயற்கையான அழகு சாதன பொருட்கள் உடனடி விளைவை வழங்கினாலும் ஆரோக்கியமற்ற ஒன்றாகும்.

மேலும் உலகம் கைத்தொழில் சமூகத்தில் இருந்து விடுபட்டு தொழில்நுட்ப சமூகத்தில் கைகோர்த்துள்ளது. பூகோளமயமாதலுக்கு பின் மருந்து வில்லைகளின் பாவனை அதிகரித்துள்ளது.

பூகோளமயமாதலினால் உறவுகள் மற்றும் செயற்பாடுகள் ஆகியவற்றின் பரம்பல் விரிவாக்கம் இதன் மூலமான நிதிச் சந்தைகள் உலகம் முழுவதும் பரவியுள்ளன. மின்னியல் வர்த்தகம் 24 மணி நேரமும் நிகழ்கின்றது. இவ்வாறாக கலாச்சார மாற்றத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. குடும்ப வாழ்க்கை முறைகளிலும்,உறவு முறைகளிலும், தொழில் முறைகளிலும் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. பல்சமூக கலாசார பிறழ்வுகள் ,மொழி மாற்றம் ,பெயர் சூட்டுவதில் மாற்றம், பண்டைய கலைகள், கூத்து,விளையாட்டு மருவியமை காணப்படுகிறது.

கலாசார நிகழ்வுகளை பார்க்கும்போது மேலைத்தேய முறைகள் புகுத்தப்பட்டுள்ளமை திருமண நிகழ்வுகளிலான மாற்றம் போன்றனவும் வளைகாப்பு, அட்சய திதி, ராக்கி, ஹோலி போன்ற நவீன புதிய கலாசார நிகழ்வுகளும் பின்பற்றப்படுகின்றன. இவை பூகோளமயமாதலின் கலாசார மாற்றங்களாகும் ஆகும்.

கிராமிய விளையாட்டுக்கள் தற்காலத்தில் நிறுவி தொழில்நுட்பத்திலும் கூடிய விளையாட்டுகள் அதிகம் காணப்படுகின்றன. இவற்றினால் பல துன்பியல் நிலைமைகள் ஏற்படுகின்றன.

ஊடகங்கள் அதிகரித்ததனால் ஏற்பட்ட வலுவும் எங்கு பார்த்தாலும் பொழுதுபோக்கிற்கான நிகழ்ச்சித் தயாரிப்புகளும் தொலைக்காட்சி ஏற்படுத்திய விளைவுகளை உலகமயப்படுத்தி இயல்பாகவே கலாசாரம் தொடர்புபட்ட விடயங்களை வெளிக்காட்டின.

இந்தோனேசியா, ஜப்பான், கென்யா மற்றும் பல்வேறு நாடுகளில் மதுபான சாலைகள், உணவு விடுதிகள் மற்றும் தேநீர் கடைகள் ஆகியவற்றில் பலர் கூட்டமாக இணைந்து தொலைக்காட்சி பார்ப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

நேரடி விளையாட்டு நிகழ்ச்சிகள் தொடர்ந்தும் சில மிகப்பெரிய பார்வையாளர்கள் கூட்டங்களை கவர்ந்தபடியே இருக்கின்றன. பொழுதுபோக்கு நிகழ்ச்சி தயாரிப்பில் கொலிவுட் உலகப்போக உரிமையை கொண்டிருக்கவில்லை உலகில் மிகச் செழுமை வாய்ந்த சினிமா கைத்தொழில் இந்தியாவின் மும்பாய் நகரத்தில் சிறப்பாக காணப்படுகிறது. இவ்வாறாக ஊடகங்கள் கலாச்சாரத்தின் பொழுதுபோக்கில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.

உலகமயமாதலினால் மொழியில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இன்று 7139 மொழிகள் உலகில் பேசப்படுகின்றன. உலகில் 146 க்கும் மேற்பட்ட நாடுகளில் ஆங்கில மொழி பேசப்படுகிறது. அதிக மக்களால் பேசப்படும் ஆங்கில மொழியை 1348 மில்லியன் மக்களும் இரண்டாவதாக 1120 மில்லியன் மக்கள் சீன மண்டரின் மொழியையும் மூன்றாவதாக 600 மில்லியன் மக்கள் ஹிந்தி மொழியையும் பேசுகின்றனர். இந்த வரிசையில் 17 வது இடத்தில் "தமிழ் மொழி" காணப்படுகின்றது. உலகின் 85 மில்லியன் மக்கள் தமிழ் மொழியை பேசுகின்றனர்.

உலகமயமாக்கத்தின் விளைவாக இப்போது உலகில் 50 விதமான மொழிகள் அழிவடையும் ஆபத்தில் உள்ளன.உலக மக்கள் தொகையில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்களுக்கு 23 மொழிகள் மட்டுமே உள்ளன.இன்று உலகமயமாக்கத்தின் முன்னேற்றத்தில் ஆங்கில மொழி முக்கிய பங்கு வகிக்கிறது.

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் முன்னணி மொழியாகவும் கணணிகள் மற்றும் கல்வியின் முக்கிய ஊடகமாகவும் ஆங்கில மொழி உலகமயமாக்கத்தால் பிரகாசிக்கின்றது. உலகமயமாக்கலால் ஆங்கில மொழி உலகளாவிய சக்தியாக உருவெடுத்துள்ளது. இந்தியாவில் பல மொழிகள் பேசப்பட்டாலும் இந்தியா முழுவதும் புரிந்து கொள்ளப்பட்ட ஒரே மொழி ஆங்கிலம் ஆகும். சில ஆன்மீக குழுக்கள் கலாசார அடையாளத்தை நிலை நாட்ட ஆங்கில மொழியை பயன்படுத்தினார்கள். சுவாமி விவேகானந்தர் வெளிநாடுகளில் எங்கள் அடையாளத்தை நிறுவி இந்த மொழியால் நம் கலாசாரத்தை வெளிப்படுத்தினர். ஆங்கில மொழி நவீன மனிதனுக்கு ஒரு புதிய வாழ்வை அளித்துள்ளது ஆங்கிலமும் உலகமயமாக்களும் பிரிக்க முடியாதவை ஒரு மனிதனின் உடல் மற்றும் உயிர் போன்று இன்றைய உலகில் உலகமயமாக்களும் ஆங்கில மொழியும் வாழ்கின்றன.

இவ்வாறாக பூகோளயமாதலால் இன்று பண்பாடு மற்றும் தனித்துவம் என்பன மாற்றமடைந்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. என்னதான் மாற்றங்கள் எதிர் வந்த போதிலும் நமது மக்கள் நமது பண்பாட்டை இழத்தல் ஆகாது .அந்த வகையில் கலாசார பூகோளமயமாதலினால் கலாசாரம் அழிந்தும் போகின்றது வளர்க்கப்பட்டும் வருகின்றது எனவும், கூறலாம்.குறிப்பாக நாம் அழிந்து போவதை தடுத்து, வளர்ச்சிக்கு உதவ வேண்டும்.

## இலங்கையிலும் ஆசியாவிலும் பணியாற்றுவதற்கு சிறந்த பணியிடங்களில் ஒன்றாக

# Ex-Pack தொடர்ந்தும் தெரிவு




Ex-Pack அணியினரைக் காணலாம்.

**நிலைபேறான ஊழியர் அனுபவங்களில் சர்வதேச தரங்களை பேணுகின்றமைக்காக, காபன் நடுநிலை சான்றிதழ் பெற்றதும், நாட்டின் முன்னணி அலைவு நெளிவான பொதித் தீர்வுகள் உற்பத்தியாளருமான Ex-Pack Corrugated Cartons PLC, இலங்கையில் பணியாற்றுவதற்கு சிறந்த நிறுவனங்கள் வரிசையில், சிறியளவிலான பணியிடங்கள் பிரிவில் ஐந்தாமிடத்தில் தரப்படுத்தப்பட்டிருந்தது.**

ஐந்தாவது தடவையாக இந்த கௌரவிப்பு Ex-Pack நிறுவனத்துக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், ஊழியர் நலன் மற்றும் ஆரோக்கியமான பணியிட கலாசாரத்தை பேணுதல் போன்றவற்றில் நிறுவனம் காண்பிக்கும் முன்னுரிமையான செயற்பாடுகளை கௌரவிக்கும் வகையில் இந்த கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது. ஆசியாவில் சிறிய மற்றும் நடுத்தரளவு பிரிவில் பணியாற்றுவதற்கு சிறந்த இடங்களில் ஒன்றாகவும் Ex-Pack கௌரவிக்கப்பட்டிருந்தது.

வளர்ச்சி மற்றும் மீண்டெழுந்திறனை முன்னெடுத்துச் செல்லும் Ex-Pack இல் பணியாற்றுவோரின் கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றுக்கு கிடைத்த கௌரவிப்பாக இவை அமைந்துள்ளது. Ex-Pack Corrugated Cartons PLC இன் தவிசாளர் சத்தார் காசிம் கருத்துத் தெரிவிக்கையில், “நாம் தலைமைத்துவ அணியில் இருந்த போதிலும், எமது ஊழியர்களிடமிருந்து நாம் உத்வேகத்தைப் பெறுவதுண்டு. அத்துடன், நாம் தொடர்ந்தும் பயில்வதில் நாட்டம் காண்பிக்கும் நிறுவனமாக திகழ்கின்றோம். Ex-Pack ஐச் சேர்ந்த அனைவரும் தமது கருத்துகளை தெரிவிக்க முடியும் என்பதுடன், தனித்துவம், பிரத்தியேக வளர்ச்சி, சமத்துவம் மற்றும் பன்முகத்தன்மை ஆகியவற்றை அனைவரின் மத்தியிலும் பேணும் வகையில் இயங்குகின்றோம்.” என்றார்.

களனியில் அமைந்துள்ள நவீன வசதிகள் படைத்த தொழிற்சாலையில் 300 உறுதியான பணியாளர்கள் காணப்படுவதுடன், நாட்டில் தொடர்ச்சியாக நிலவிய சிவில் யுத்தம் முதல் கொவிட் தொற்றுப் பரவல் மற்றும் பொருளாதார தளம்பல்கள் நிறைந்த நெருக்கடியான சூழல்களிலும், இவர்கள் நிறுவனத்தின் மீதான தமது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தி பணியாற்றி வருகின்றனர். அணியினர் படிப்படியாக உறுதித் தன்மையை வெளிப்படுத்தி செயலாற்றி வருகின்றனர். நிறுவனம் அனைவரினதும் கருத்துக்களுக்கும் செவிமடுக்கும் கொள்கையை பின்பற்றுவதுடன், தற்போது கொண்டுள்ள நிறுவன கலாசாரத்தில் இது மிகவும் முக்கிய பங்கை வகிக்கின்றது.



பிஎல்சி தவிசாளர், சத்தார் காசிம்

Ex-Pack தனது ஊழியர்களுக்கு தமது பிரத்தியேக மற்றும் தொழில்சார் இலக்குகளை எய்துவதற்கு கிடைக்கும் வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள ஊக்குவிப்புகளை வழங்குகின்றது. அத்துடன் பணி-வாழ்க்கை சமநிலை, உள ஆரோக்கியம் மற்றும் ஆரோக்கியமான மனநிலை தொடர்பான பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள் மற்றும் குறுகிய அமர்வுகளை முன்னெடுக்கின்றது. பெருமளவில் ஆண்கள் பணியாற்றும் துறையில் இயங்கும் Ex-Pack, பாலின சமத்துவம் தொடர்பிலும் கவனம் செலுத்தியுள்ளது. பாலின பாகுபாடு மற்றும் ஓரங்கட்டல் தொடர்பில் சகிப்புத்தன்மையை நிறுவனம் கொண்டிருப்பதில்லை.

Aberdeen Holdings (Pvt) Ltd இன் துணை நிறுவனமாக Ex-Pack Corrugated Cartons PLC திகழ்வதுடன், உள்நாட்டு மற்றும் சர்வதேச வாடிக்கையாளர்களுக்கு பொதியிடல் தீர்வுகளை வழங்குகின்றது. நிறுவனம் ISO 9001-2015, ISO 14001-2015, FSC COC, WRAP ஆகிய சான்றிதழ்களைப் பெற்றுள்ளதுடன், NCE ஏற்றுமதி விருதுகள், CNCI விருதுகள், லங்கா ஸ்டார் விருதுகள், NBE விருதுகள், லங்கா CSR விருதுகள் மற்றும் Green விருதுகள் ஆகியவற்றில் கௌரவிப்புகளைப் பெற்றுள்ளது.






## 40 வருட கால ஒப்பற்ற தரம் மற்றும் சிறப்பை கொண்டாடும்

# Flora Tissues

மென்மையான, பயன்படுத்திவிட்டு அழித்துவிடக்கூடிய டிஷூ கடதாசி தயாரிப்புகள் உற்பத்தியில் ஈடுபடும் இலங்கையில் பெருமைக்குரிய நாமமும், சந்தை முன்னோடியான புகழ்பெற்ற Flora டிஷூ தயாரிப்புகளின் உற்பத்தியாளராகவும் திகழும் Pee Bee மனேஜ்மன்ட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிடெட், தனது 40 வருட பூர்த்தியைக் குறிக்கும் வகையில் விசேட நிகழ்வை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது. இதன் போது, புதிய தயாரிப்புகள் அறிமுகம் செய்வது தொடர்பான தனது தூரநோக்குடைய திட்டங்களை அறிமுகம் செய்திருந்ததுடன், துரிதமாக அதிகரித்து செல்லும் சவால்கள் நிறைந்த சந்தை சூழ்நிலையிலும் ஊழியர்களையும், விநியோகத்தர்களையும் அழைத்து இந்த நிகழ்வை முன்னெடுத்திருந்தது.

2023 செப்டெம்பர் 9 ஆம் திகதி தனது 40 வருட பூர்த்தியைக் குறிக்கும் நிகழ்வை, கோல்டன் ரோஸ் பகுதியில் முன்னெடுத்திருந்தது. இதன் போது, நிறுவனத்தில் பணியாற்றும் விநியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களை கௌரவித்திருந்தது. 1983 ஆம் ஆண்டு முதல் பலர் Flora டிஷூக்களுடன் இணைந்து தமது தொழில் வாழ்க்கைப் பயணத்தை முன்னெடுத்து வருகின்றனர். ஒன்று முதல் மூன்று தசாப்த கால அனுபவத்தைக் கொண்டிருந்த இவர்களுக்கு நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரிடமிருந்து கௌரவிப்பு சின்னம் வழங்கப்பட்டிருந்தது.

நிறுவனத்துடனான தமது நீண்ட கால வரலாற்றுப் பயணத்தை சகல பங்குபற்றுநர்களும் நினைவுகூர்ந்ததுடன், Flora டிஷூக்களின் தங்க விழா பூர்த்தியை காண்பதற்கு தம்மை உறுதியாக அர்ப்பணித்துள்ளனர்.

நிகழ்வின் விசேட அதிதிகளில், இந்தியாவை தளமாகக் கொண்ட ஒரியன்ட் பேப்பர் மில்ஸ் பிரதிநிதிகளான தெபோஜித் சென்குப்தா மற்றும் அம்ரிந்தர் பத்ரா ஆகியோரும், இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் (ஆவணப்படுத்தல்கள் மற்றும் தகவல் சேவைகள்) திருமதி. ரி.எஸ். சேனாரட்ன அவர்களும் அடங்கியிருந்தனர்.

1982 ஆம் ஆண்டின் முற்பகுதிகளில், பிரத்தியேக தூய்மை தீர்வை பெற்றுக் கொடுப்பதில் மாற்றத்துக்கான தேவை உணரப்பட்டிருந்தது. குறிப்பாக, இலங்கையர்கள் மத்தியில் பிரத்தியேக தூய்மைப் பழக்கத்தை மேம்படுத்துவதில் இந்த தேவை பெரிதும் உணரப்பட்டது. பணிப்பாளர்களின் சிந்தனையில் தோன்றிய எண்ணக்கருவின் அடிப்படையில் 1983 ஆம் ஆண்டின் முற்பகுதியில் மென் டிஷூ தயாரிப்புகளை உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அதனூடாக, அதிகளவு தேவையை கொண்டிருந்த பிரத்தியேக தூய்மை தயாரிப்புகளில் மென் டிஷூ தயாரிப்புகள் 1983 ஆம் ஆண்டின் நடுப்பகுதி முதல் உற்பத்தி செய்பாடுகள் ஆரம்பத்துடன், உள்நாட்டு நுகர்வோருக்காகவும், சுற்றுலாப் பயணிகளுக்கு சேவைகளை வழங்கிய பல ஹோட்டல்களில் பயன்படுத்துவதற்காகவும் சந்தையில் கிடைக்கத் தொடங்கியது.

1983 ஆம் ஆண்டில் Flora வர்த்தக நாமம் அறிமுகம் செய்யப்பட்டது. உயர் தரம் வாய்ந்த பேப்பர் சேவியட்கள், ஃபேஷியல் டிஷூக்கள், பேப்பர் டவல்கள் மற்றும் கழிவறை டிஷூக்கள் போன்றவற்றை இலங்கை சந்தையில் சகாயமாக கிடைக்கச் செய்யும் நோக்கில் இந்த வர்த்தக நாமம் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது.

இரத்மலானை பகுதியில் வாடகைக்கு பெறப்பட்ட பகுதியில் தொழிற்சாலை நிறுவப்பட்டு ஆரம்பகட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. ஒரு இயந்திரம் மற்றும் ஏழு ஊழியர்களுடன் உற்பத்தி செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. 1991 ஆம் ஆண்டு முதல், ஹோமகம, கட்டுவான தொழிற்பேட்டை பகுதியில் அமைந்த தனது சொந்த கட்டிடத்துக்கு உற்பத்தி தொழிற்சாலை மாற்றப்பட்டது. இங்கு முழு ஆற்றலுடனான உற்பத்தி வளாகம், களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோக வசதி போன்றவற்றுடன் நவீன வசதிகளைக் கொண்ட உட்கட்டமைப்பு மற்றும் சரக்கு கையாளல் வசதிகள் போன்றன காணப்படுவதுடன், 320 க்கும் அதிகமான ஊழியர்களும் பணியாற்றுகின்றனர். இவர்கள் தொழிற்சாலையை அண்மித்த பகுதிகளில் வசிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 40 வருடங்களாக மென்மையான, பயன்படுத்திவிட்டு அழித்துவிடக்கூடிய டிஷூ கடதாசி தொழிற்துறையில் சந்தை முன்னோடியாக Flora டிஷூக்கள் திகழ்வதுடன், இலங்கையில் 60 சதவீதத்துக்கும் அதிகமான சந்தைப்பங்கை தன்வசம் கொண்டுள்ளது. நாடு முழுவதையும் உள்வாங்கி பரந்த விநியோக வலையமைப்பைக் கொண்டுள்ளது. Flora டிஷூ வர்த்தக நாமம் தன்வசம் பரந்தளவு தெரிவுகளை கொண்டுள்ளதுடன், நுகர்வோருக்கு மாத்திரமன்றி, ஹோட்டல்கள், உணவகங்கள், வைத்தியசாலைகள் போன்ற நிறுவகங்களுக்கும் வழங்குகின்றது.

நிறுவனம் பல்வேறு கௌரவிப்பு விருதுகளை சுவீகரித்திருந்தது. இவற்றில் சுப்பர் பிரான்ட் அந்தஸ்து, ஆசிய பசுபிக் தொழில்முயற்சியாண்மை விருது, அமெரிக்காவை தளமாகக் கொண்ட World Confederation of Businesses இன் BIZZ விருது, ஆசிய கூட்டாண்மை சிறப்பு மற்றும் நிலைபேறாண்மை விருது ஆசியாவின் சிறந்த சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மை மற்றும் Asia One சஞ்சிகை மற்றும் URS Media Consulting P.L. ஆகியவற்றின் ஆசியாவின் சிறந்த வர்த்தக நாமங்கள் மற்றும் தலைவர்கள் கௌரவிப்பு போன்றன அடங்கியுள்ளன.

இன்று Flora டிஷூக்கள் தொடர்ந்தும் தனது தயாரிப்பு பிரிவை உள்நாட்டு சந்தையில் விஸ்தரித்த வண்ணமுள்ளதுடன், மாலைதீவுகள் மற்றும் சீஷெல்ஸ் ஆகிய சந்தைகளுக்கும் ஏற்றுமதி செய்த வண்ணமுள்ளது. இதுவரை கடந்து வந்த பயணமும், இனி வரும் தசாப்த காலமும் தெளிவாக அமைந்திருப்பதுடன், சகல ஊழியர்கள், விநியோகத்தர்கள் மற்றும் பங்காளர்களின் ஒப்பற்ற அர்ப்பணிப்பினூடாக எய்தப்பட்டுள்ளதுடன், Flora வர்த்தக நாமத்தின் மீது இலங்கையின் நுகர்வோர்கள் கொண்டுள்ள அன்பு, நம்பிக்கை மற்றும் தெரிவு போன்றவற்றையும் நிறுவனம் நினைவுகூரவும், நன்றி தெரிவிக்கவும் மறந்துவிடவில்லை.

ஒட்டாவா

# “இந்தியாவுடனான உறவு முக்கியமானது”

இந்தியா- கனடா உறவு நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே வருகிறது. காலிஸ்தான் பயங்கரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கடந்த ஜூன் மாதம் கனடாவில் வைத்து கொலை செய்யப்பட்ட நிலையில், அதில் இந்தியாவுக்குத் தொடர்பு இருக்கலாம் எனக் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றஞ்சாட்டியதே இதற்குக் காரணமாகும்.

இந்தக் குற்றச்சாட்டுகளை இந்தியா திட்டவட்டமாக மறுத்துள்ளது. மேலும், கனடா தனது குற்றச்சாட்டுகள் குறித்த ஆதாரங்களை வெளியிட வேண்டும் என்றும் வலியுறுத்தியது. இருப்பினும், கனடா ஆதாரங்களை வெளியிடாமல் தொடர்ந்து குற்றச்சாட்டுகளை மட்டும் முன்வைத்து வருகிறது.



இதனால் இரு நாட்டு உறவு கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இந்த பரபர குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் முன்பு, இந்தியாவுடன் வர்த்தகம், பாதுகாப்பு மற்றும் குடியேற்றம் ஆகியவற்றில் நீண்ட மற்றும் நல்லுறவைக் கனடா வைத்திருந்தது.

குறிப்பாக இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தகத்தை மேலும் எளிமையாக்கப் பேச்சுவார்த்தைகளும் கூட நடத்தப்பட்டன.

இதற்கிடையே சர்வதேச ஊடகத்திற்குப் பேட்டி அளித்த அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் பில் பிளேயர் சில முக்கிய கருத்துகளைத் தெரிவித்துள்ளார். இந்தியாவுடனான உறவை “முக்கியமானது” என்று கூறிய அவர், குற்றச்சாட்டுகள் குறித்த விசாரணை ஒரு பக்கம் தொடரும் நிலையில், கனடா இணைந்து பணியாற்றுவதைத் தொடரும் என்றும் பிளேயர் தெரிவித்தார்.

## ஆபத்தான சிறுகோளின் தரையிறங்கிய நாசா கலம்



சூரியனை சுற்றியுள்ள மிகவும் ஆபத்தான சிறுகோளின் மாதிரிகளுடன் நாசாவின் கலமொன்று வெற்றிகரமாக தரையிறங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுகோள்கள் என அழைக்கப்படும் சூரியனை சுற்றிவரும் எரிகற்களின் மாதிரிகளுடன் நாசாவின் விண்வெளி கலமொன்று அமெரிக்காவின் உட்டா பாலைவனத்தில் தரையிறங்கியுள்ளது.

இந்த மாதிரிகள் சூரிய குடும்பத்தின் உருவாக்கம் பூமி எவ்வாறு வாழக்கூடியதாக மாறியது என்பதை புரிந்துகொள்வதற்கு உதவும் என விஞ்ஞானிகள் பெரும் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

ஏழுவருட விண்வெளி பயண முயற்சியின் மூலம் இது சாத்தியமாகியுள்ளது. பெனும் எனும் சிறியகோளின் மேற்பரப்பிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகளுடன் ஓசைரிஸ் ரெக்ஸ் விண்கலம் தரையிறங்கியுள்ளது.



நியூயோர்க்

## உலகின் மிகப்பெரிய இந்து கோயில்

நவீன காலத்தில் இந்தியாவுக்கு வெளியே கட்டமைக்கப்பட்ட மிகப்பெரும் இந்துக் கோயில், அமெரிக்காவின் நியூ ஜெர்ஸியில் ஒக்டோபர் 8 ஆம் திகதியன்று குடமுழுக்கு காண இருக்கிறது.

நியூ ஜெர்சியின் ராபின்ஸ்வில்லி நகரியத்தில் அமைந்துள்ள சுவாமிநாராயண் அக்ஷர்தாம் கோயில், அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த சுமார் 12,500 பக்தர்கள் மற்றும் தன்னார்வலர்களின் உழைப்பால் உருவாகி உள்ளது.

2011-ல் தொடங்கிய கட்டுமானப் பணிகள், 12 ஆண்டுகள் நிறைவில் 2023-ல் தற்போது குடமுழுக்கு காண இருக்கிறது.

நவீன காலத்தில் இந்தியாவுக்கு வெளியே எழும்பிய உலகின் மிகப்பெரும் இந்து கோவில் என்ற பெருமை இந்தக் கோயிலுக்கு சேர்ந்திருக்கிறது.

அமெரிக்கா

## பார்த்தாலே பதறுது



அமெரிக்காவின் நியூயோர்க் நகரத்தில் எலிகளின் தொல்லை அதிகம். சமீப காலமாக இந்த எலிகளின் அளவு அதிகரித்துள்ளது, ஒரு மனிதக் குழந்தைக்கு சமமாகி வருவதாக அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்நிலையில், அந்த எலிகள் நன்றாக உண்பதால் அவை பெரிதாகி வருகின்றன. அவற்றின் அளவு அதிகரித்து வருவதால், வீடுகளுக்குள் நுழைந்து, தங்களுக்கான உணவைத் தேடும் தைரியமும் அதிகரித்து வருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

புதுடெல்லி

## ஒக்.1 மெகா தூய்மைப்பணி

நாடு முழுவதும் ‘சுகாதார சேவை’ என்ற பெயரில், பிரமாண்ட தூய்மைப்பணி நடந்து வருகிறது. செப்டம்பர் 15-ந் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த பணி, ஒக்டோபர் 2-ந் திகதிவரை இடம்பெறும்.

மகாத்மா காந்தி பிறந்தநாளையொட்டி, இந்த பிரசாரம் நடக்கிறது. அதன் ஒரு பகுதியாக, ஒக்டோபர் 1-ந் திகதி காலை 10 மணிக்கு நாடு முழுவதும் பொது இடங்களில் மெகா தூய்மைப்பணி மேற்கொள்ளப்படும் என்றும், அதில் பொதுமக்கள் ஒவ்வொருவரும் ஒரு மணி நேரம் ஒதுக்கி பங்கேற்குமாறும் ‘மனதின் குரல்’ நிகழ்ச்சி மூலம் பிரதமர் மோடி அழைப்பு விடுத்தார்.





கும்பகோணம்

## சானிடைசர் கலந்து குடித்த இருவர் பலி

அதிக போதைக்காக மதுவில் சானிடைசர் உடன் போதை மாத்திரை கலந்து குடித்த இரண்டு பேர் உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கும்பகோணம் காவிரி ஆற்றங்கரையில் சடலமாக இருந்த இருவரின் உடல்களை மீட்டு காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

சென்னை

## கரையாத விநாயகர் சிலைகள்

சென்னை பட்டினப்பாக்கம் கடற்கரையில் 50 க்கும் மேற்பட்ட விநாயகர் சிலைகள் கரையாமல் கரை ஒதுங்கி கிடக்கும் நிலையில், அதை அகற்றுவது தொடர்பாக சென்னை மாநகராட்சி ஆணையர் ராதாகிருஷ்ணன் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

விநாயகர் சதுர்த்தி விழா கடந்த திங்கட்கிழமை (18) கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு பிரம்மாண்ட சிலைகள் வைத்து பூஜை செய்யப்பட்டன. சென்னை மாநகர எல்லைக்குள் 1,510 விநாயகர் சிலைகள் வைக்கப்பட்டு இருந்தன. இந்த விநாயகர் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டு பூஜிக்கப்பட்டது. பூஜிக்கப்பட்ட விநாயகர் சிலைகளை நீர் நிலைகளில் கரைப்பது வழக்கமாக உள்ளது.

இந்த நிலையில், சென்னை மநாகாராட்சி ஆணையர் ராதாகிருஷ்ணன் சென்னை பட்டினம்பாக்கம் கடற்கரையில் ஆய்வு மெற்கொண்டார். அப்போது அவர் கூறுகையில், “1,400-க்கும் மேற்பட்ட விநாயகர் சிலைகள் உள்ளே கரைக்கப்பட்டன. சுமார் 50 சிலைகள் கரை ஒதுங்கியுள்ளன. பெரிய சிலைகள் உள்ளே போகாமல் தடுமாறும் நிலை இருப்பதை பார்க்க முடிகிறது. பெரிய சிலைகளை மீண்டும் கடலில் போடுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கிறோம் என்றார்.

அவுஸ்திரேலியாவுக்கெதிரான

# தொடரை கைப்பற்றியது இந்தியா



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை இந்தியா கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் ஏற்கெனவே வென்றிருந்த இந்தியா, இந்தூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றியது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட இந்தியா, ஷ்ரேயாஸ் ஐயரின் 105 (90), ஷுப்மன் கில்லின் 104 (97), சூரியகுமார் யாதவ்வின் ஆட்டமிழக்காத 72 (37), பதிலணித்தலைவர் லோகேஷ் ராகுலின் 52 (38), இஷன் கிஷனின் 31 (18) ஓட்டங்களோடு 50 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 399 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், ஜொஷ் ஹேசில்வூட், அடம் ஸாம்பா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பின்னர் மழை காரணமாக 33 ஓவர்களில் 317 ஓட்டங்களை டக்வேர்த் லூயிஸ் முறைப்படி வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, பிரசீத் கிருஷ்ணா (2), இரவிச்சந்திரன் அஷ்வின் (3), இரவீந்திர ஜடேஜா (3), மொஹமட் ஷமியிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 28.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 217 ஓட்டங்களையே பெற்று 99 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில், ஷோன் அபொட் 54 (36), டேவிட் வோர்னர் 53 (39) ஓட்டங்களைப் பெற்றனர்.

இப்போட்டியின் நாயகனாக ஐயர் தெரிவானார்.

நெஸ்டோமல்ட் சைக்கிள் சவால்:

## எஸ்.எஸ்.எச் மகே முதலிடம் பெற்றார்




விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் வழிகாட்டலின் கீழ் நெஸ்லே நெஸ்டமோல்டின் அனுசரணையில் இலங்கை சைக்கிளோட்ட சம்மேளனத்தால் நடாத்தப்பட்ட சைக்கிள் சவால் போட்டியின் கனிஷ்ட ஆண்கள் பிரிவில் கதிரான ஸ்பீட் சைக்கிளோட்டக் கழகத்தின் எஸ்.எஸ்.எச். மகே முதலிடம் பெற்றார்.

இப்போட்டியில் 650க்கும் மேற்பட்ட சைக்கிளோட்ட வீரர்கள் பங்கேற்றிருந்த நிலையில் இரண்டாமிடத்தை களனி சைக்கிளோட்டக் கழகத்தின் எம்.ஏ.எச்.எஸ். சமரவீர பெற்றிருந்ததோடு, மூன்றாமிடத்தை வென்னப்புவ சைக்கிளோட்டக் கழகத்தின் எம். டி.டி. பெரேரா மூன்றாமிடத்தைப் பெற்றார்.

ஆசியப் போட்டிகளில்

## கிரிக்கெட்டில் வெள்ளிப் பதக்கம் வென்ற இலங்கைப் பெண்கள்



ஆசியப் போட்டிகளில், பெண்களுக்கான கிரிக்கெட்டில் இலங்கைப் பெண்கள் அணி வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுள்ளது.

சீனாவின் ஹங்சூவில் நேற்று நடைபெற்ற தங்கப் பதக்கத்துக்கான இறுதிப் போட்டியில் இந்தியாவிடம் தோல்வியடைந்தமையைத் தொடர்ந்தே இந்தியா தங்கப் பதக்கத்தைப் பெற இலங்கை வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

இந்தியா: 116/7 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஸ்மிருதி மந்தனா 46 (45), ஜெமிமா றொட்றிகாஸ் 42 (40) ஓட்டங்கள். பந்துவீச்சு: இனோக றணவீர 2/21 [4], உதேஷிகா பிரபோதினி 2/16 [3], சுகந்திகா குமாரி 2/30 [4], இனோஷி பிரியதர்ஷினி 0/11 [3], ஒஷாடி றணசிங்க 0/11 [2], கவிஷா டில்ஹாரி 0/7 [1.1], சாமரி அத்தபத்து 0/19 [2.5])

இலங்கை: 97/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஹஸினி பெரேரா 25 (22), நிலக்‌ஷி டி சில்வா 23 (34), ஒஷாடி றணசிங்க 19 (26) ஓட்டங்கள். பந்துவீச்சு: டிடாஸ் சது 3/6 [4], ராஜேஸ்வரி கயக்வாட் 2/20 [3], தேவிகா வடியா 1/15 [4], பூஜா வஸ்ராகர் 1/20 [4], தீப்தி ஷர்மா 1/25 [4], அமன்ஜொட் கௌர் 0/6 [1])

இதேவேளை, வெண்கலப் பதக்கத்துக்கான போட்டியில் பாகிஸ்தானை வென்ற பங்களாதேஷ் வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டது.

## தேசிய மட்டத்தில் கல்முனை அல்-மிஸ்பாஹ்வின் ஆகில் மிகா

எம்.என்.எம். அப்ராஸ்

கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் 14 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 80 மீற்றர் தடைதாண்டல் ஓட்ட நிகழ்ச்சியில் பங்குபற்றிய கல்முனை அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலய மாணவனான எம்.எம்.எம். ஆகில் மிகா முதலாமிடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.




தேசிய அணியில்

## ‘கிழக்கு வீரர்கள் விளையாட வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும்’



நூருல் ஹுதா உமர்

“விளையாட்டு உலகம் எங்கயோ போய்க்கொண்டிருக்கின்றது இன்று இந்தியன் பிறீமியர் லீக், ஸ்ரீ லங்கா பிறீமியர் லீக் என்றும் நடத்தப்பட்டு திறமைகள் அடையாளம் காணப்பட்டு அதிகளவான வீரர்கள் தேசிய அணிக்குள் உள்வாங்கப்படுகின்றபோது கிழக்கில் இன்னமும் மென்பந்தில் விளையாடிக் கொண்டிருக்கிறோம். இன்னும் எத்தனை நாட்களுக்கு நாம் மென்பந்தில் கிரிக்கட் விளையாடுவது, இது ஒருவேதனையான விடயமாகும். இன்னும் 10 வருடத்திலாவது எமது பிள்ளைகள் மென்பந்தில் உள்ள தேர்ச்சி இருக்கத்தக்கதாக கடினபந்திலும் அதியுச்ச தேர்ச்சி பெற்று தேசிய அணியில் விளையாடுவதற்கான ஆரம்ப ஏற்பாடுகளை செய்து கொண்டு வருகின்றோம். இன்னும் குறிப்பிட்ட நாட்களுக்குள் கடினபந்துக்கான பயிற்சிக் கூடாரத்தை விளையாட்டு வீரர்களுக்கு கையளிக்கவுள்ளோம் என கிழக்கின் கேடயம் பிரதானி எஸ்.எம். சபீஸ் தெரிவித்தார்.

பெருந்தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஸ்ரப் அவர்களின் ஞாபகார்த்த தினத்தை முன்னிட்டு பாலமுனை மெரூன் விளையாட்டு கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இரவுநேர மென்பந்து சுற்றுப்போட்டிகளின் இறுதிநாள் போட்டிகளுக்கு கௌரவ அதிதியாக கலந்து கொண்டிருந்த போதே அவர் ஊடகங்களுக்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், முன்னாள் அமைச்சருமான, பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ரவூப் ஹக்கீம் எஸ்.எம். சபீஸ் முன்வைத்த விடயம் ஒரு முக்கியமான விடயமாகும். அம்பாறை மாவட்டத்தில் 150 கழகங்கள் அரச திணைக்களங்களில் பதியப்பட்டு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாக கூறுகின்றனர், ஆனால் யாருக்கு வழங்கினார்களோ தெரியாது என்றார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் செவ்வாய்க்கிழமை 26 செப்டெம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.